விலை: 30.00
பக்கங்கள் - 24
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 07 புதன்கிழமை (22.07.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 216

அன்பு வாசகர்களே!
எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை முதல்
புருசோத்தமன் எழுதும்
நல்லவர்க்கெல்லாம் சாட்சிகள் உண்டு...
தொடர் வெளிவரும்
வாசிக்கத் தவறாதீர்கள்

## வாள்முனையில் 16 பவுண் நகை மூளாயில் கொள்ளை

(அராலி)

வாள்முனையில் 16 பவுண் நகையும் 2 ஆயிரம் ரூபாய் பணமும் 23

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் வவுனியாவில் போராட்டம்



(வவுனியா)

வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக சுழற்சிமுறை உணவுத்தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் 23

## கோட்டா ஆட்சியில் ஒற்றையாட்சிக்குள்

# மாகாண சபைகளுக்கு முழுமையான அதிகாரம்

## வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு



(கொழும்பு)

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான புதிய அரசாங்கத்தில் ஒற்றையாட்சிக்குள் மாகாண சபைகளுக்கு முழுமையான அதிகாரம் வழங்கப்படும் என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை இரத்து செய்தால் பலவீனமாக அரச நிர்வாகம் தோற்றம் பெறும் என்றும் ஆகவே 13ஆவது திருத்தம் ஒருபோதும் இரத்துச் செய்யப்பட மாட்டாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ ஒருமித்த நாட்டுக்குள் 13 ஆவது அரசியலமைப்பின் திருத்தம் ஊடாக அதிகாரப் பகிர்வை வழங்குவதாக கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ளமை ஏற்றுக் 23

## மன்னாரில் மீனவர்கள் மீது கடற்படை தாக்குதல்

08ஆம் பக்கம் பார்க்க

## தென்மராட்சியில் ரயில் மோதி 16 மாடுகள் உயிரிழப்பு

06ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதிக்கு கொலை அச்சுறுத்தல்

05ஆம் பக்கம் பார்க்க

## 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் தபால்மூலம் வாக்களிக்காதவர்கள் மீண்டும் வாக்களிக்கலாம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தேர்தலுக்கான தபால் மூல வாக்கெடுப்பு நேற்றுடன் நிறைவு பெற்ற நிலையில் இதன்போது வாக்களிக்கத் தவறியவர்களுக்கு மேலும் இரண்டு நாட்கள் வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்கப் 23

## சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி நல்லூர்த் திருவிழாவில் பங்கேற்கலாம்

### அங்கப்பிரதிஷ்டை, காவடி, அன்னதானம், தண்ணீர்ப்பந்தல் மற்றும் வியாபாரத்துக்கு தடை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலய பெரும் திருவிழாவில் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி வருகின்ற பக்தர்களை அனுமதிக்க முடிவு செய்யப்பட்டுள் 23






# அரசு தகவலை மறைக்கின்றது இலங்கையில் கொரோனா 3ம் அலையும் ஏற்படக்கூடும்

## அரச தாதி உத்தியோகத்தர் சங்கம்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொடர்பான தகவலை அரசு மறைக்கின்றது. இலங்கையில் கொரோனா வைரஸின் மூன்றாவது அலை ஏற்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக அரச தாதி உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய எச்சரித்துள்ளார்.

அத்துடன் அரசாங்கத்தினால் சமூக கட்டுப்பாடுகளை தளர்த்தும் நடவடிக்கை மேற்கொண்டால் இரண்டாவது அலை அல்ல மூன்றாவது அலையும் ஏற்படக் கூடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா தொற்றினை கட்டுப்படுத்தியதாக அரசாங்கம் தொடர்ந்து கூறி வந்த போதிலும் அவ்வாறான ஒன்று இடம்பெறவில்லை என்றும் இன்று நாட்டின் பல பிரதேசங்கள் முடக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கத்தினால் சில இடங்கள் தொடர்பில் தகவல் வெளியிடாமல் மறைக்கப்பட்டுள்ளதுடன் இரண்டாவது அலையை மறைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊடக சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அரச தாதி உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய இவற்றினைக் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

# என் கனவு யாழ் இன்று வெளியீடு

(யாழ்ப்பாணம்)




ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சின் யாழ். மாவட்டத் தலைவர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் நடைபெறவுள்ள 2020 பாராளுமன்ற தேர்தலையொட்டிய, என் கனவு யாழ் திட்ட வரைபு வெளியீடு இன்று புதன்கிழமை காலை 10.00 மணியளவில் வலம்புரி ஹோட்டல் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இவ் நிகழ்வில் சமயப் பெரியோர்கள், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் வேட்பாளர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், அங்கஜன் அணியினர், கட்சி ஆதரவாளர்கள் என கலந்து கொள்ளவுள்ளனர். (ம-3)

# தேர்தல் இறுதி முடிவுகள் ஓகஸ்ட் 6ஆம் திகதி பிற்பகலே வெளியிடமுடியும்

பொதுத் தேர்தலின் இறுதி முடிவுகளை ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதி பிற்பகல் அளவில் வெளியிட முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இம் முறை பொது தேர்தலுக்கான தாபல் மூல வாக்களிப்பிற்கு எதிர்வரும் 24 மற்றும் 25 ஆம் திகதி விசேட தினங்களாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

# நிபந்தனைகளுக்கு அடிபணியாமல் பலமான அரசாங்கம் ஒன்றை அமைக்க மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம்

## பிரதமர் மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

தேசத் துரோக நிபந்தனைகளுக்கு அடிபணியாமல் பலமான அரசாங்கத்தை அமைக்க வேண்டுமாயின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்களை கைப்பற்றுவது அவசியமாகும். தேசிய வளங்களை விற்ற ஐக்கிய தேசிய கட்சியினர் திருடர்களுக்கு ஒப்பானவர்கள். மிகுதியாகவுள்ள வளங்களை கொள்ளையடிக்கவே மீண்டும் மக்களாணையை அவர்கள் கோருகிறார்கள் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கண்டி- குண்டசாலைப் பகுதியில் நேற்று இடம் பெற்ற பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், எதிர்கால தலைமுறையினருக்கு சொந்தமான தேசிய வளங்களை விற்ற ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் திருடர்களுக்கு ஒப்பானவர்கள். மிகுதியாகவுள்ள வளங்களை சூறையாடி கொள்கையடிப்பதற்கே பொதுத்தேர்தலில் மீண்டும் மக்களாணையை கோருகிறார்கள்.

ஐக்கிய தேசிய கட்சியினரும், ஐக்கிய மக்கள் சக்தியினரும் பொதுத்தேர்தல் ஊடாக சிறிகொத்தாவை கைப்பற்ற முயற்சிக்கிறார்கள். இவர்களுக்கு மக்கள், அபிவிருத்தி குறித்து எவ்வித அக்கறையும் கிடையாது. சிறிகொத்தாவை கைப்பற்ற தேர்தலில் போட்டியிட தேவையில்லை. ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மொட்டு சின்னத்தில் தாராளமாக இணைந்து கொள்ளலாம்.

தேசத் துரோக நிபந்தனைகளுக்கு அடிபணியாமல் பலமான அரசாங்கத்தை ஸ்தாபிக்க வேண்டுமாயின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவை பொதுஜன பெரமுன பெற வேண்டும். சிறந்த அரசாங்கத்தை ஸ்தாபிக்க எமக்கு ஆதரவு வழங்குவது மக்களின் கடமையாகும். அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக வாழும் ஒருமித்த நாட்டை நிச்சயம் உருவாக்குவோம்.

ஐக்கிய தேசிய கட்சியை மீள் புனரமைக்க முடியாத அளவிற்கு பிளவுபடுத்தியுள்ளார். ஆகவே ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்கள் அரசியலில் நிலையற்ற நிலையில் உள்ளார்கள். நாட்டை பாதுகாப்பதற்கு இவர்கள் எம்முடன் இணைய வேண்டும். பயனற்ற எதிர்தரப்பினரை நம்பி இனி பயன் கிடைக்காது என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். (ம-3)


31ம் நாள் வீட்டுக் கிருத்திய அழைப்பு



கடந்த 23.06.2020 அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்
அமரர்
இரத்தினம் பரராஜசிங்கம்

அவர்களின் 31ம் நாள் கிரியைகள் நாளை (23.07.2020) வியாழக்கிழமை காலை 04.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

(C-9925)

மயிலியதனை,
தொண்டைமானாறு.
குடும்பத்தினர்



ஓம் ஸ்ரீ ஸ்வாமியே - ஶரணம் ஐயப்பா !!!

என்றும் மறவோம்!

மண்ணில் 25 - 02 - 1962
விண்ணில் 20 - 07 - 2020



யாழ். கட்டுவன் கரண்டக்குளம் ஸ்ரீ ஐயப்பன் கோவில்
பிரதம குருவும் குருஸ்வாமியுமாகிய
சிவஸ்ரீ. சிவ. அருணாசலக் குருக்கள்

ஐயனை நாடி வருவோருக்கு, திரிகரண சுத்தியோடு
பூசையாற்றி, தாகம் தீர்த்தும் - அன்னமிட்டும்,
மடத்தில் தங்கவும், எந்தவித பிரதிபலனையும் எதிர்பாராமல்
செய்த பெரும் தியாகத்தை என்றும் மறவோம்!

சூரிய சந்திரர் உள்ளவரை நீங்கள் செய்த
தரும காரியங்கள் அழியாமல் நிலைத்திருக்கும்!

தங்கள் ஆத்மா சாந்தியடைவதாக!
மைந்தர் மூவருக்கும் மனோ பலத்தை எல்லாம்வல்ல ஸ்ரீ தர்ம சாஸ்தா
பரிபூரணமாக வழங்கி தங்கள் பணியைத் தொடர்ந்தும்
முன்னெடுக்க ஆசி வழங்கட்டும்!

(C-9931)

மூளாய்
077 727 9238

என்றும் நன்றியுடன்
தங்க. முகுந்தன்
குருஸ்வாமி
சபரி ஸ்ரீ ஐயப்பன் யாத்திரைக் குழு

# குருநாகல் மரபுரிமை உடைப்பு விவகாரம் உண்மைகள் விரைவில் வெளியாகும்

## பிரதமர் கூறுகிறார்



(கொழும்பு)

தொல்பொருட்களை அழித்து விட்டதாக பெரிதாக சத்தமிடும் எதிர்க்கட்சியினர் அன்று பகிரங்கமாக தொல்லியல் முக்கியத்துவமிக்க இடங்களை அழித்தனர் என்பதை முழு நாடும் நன்கு அறியுமென பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வரலாற்று பெறுமதியான இடமெனக் கூறப்படும் குருநாகல் நகரில் உள்ள அரச மண்டபம் இடிக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் சுமத்தும் குற்றச்சாட்டு தொடர்பாக, தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தக் குற்றச்சாட்டு குறித்து விசாரணை நடத்த குழு நியமிக்கப்பட்டுள்ளது. அந்த விசாரணை தற்போது நடைபெற்று வருகிறது. இதன் பின்னர் உண்மையான நிலைமை என்ன என்பது தெரியவரும்.

இந்தக் குற்றச்சாட்டை முன்வைக்கும் எதிர்க்கட்சியினர் தேர்தல் கூட்டங்களில் எமக்கு சேறுபூச தலைப்புகளை தேடி வருகின்றனர்.

இவர்கள் அன்று நாட்டு மக்களுக்கு எதனையும் செய்யவில்லை. இவர்கள் அன்று தொல்லியல் முக்கியத்துவமிக்க எச்சங்களைக் கூட அகற்றினர்.

இருப்பினும் குருநாகல் சம்பவத்தின் உண்மைகள் விரைவில் வெளியாகும் என அவர் தெரிவித்துள்ளார். (ஐ-4)






## சிக்கிய பொலிஸ் அதிகாரி

(கொழும்பு)

இலஞ்சம் வாங்கியபோது உதவிப் பொலிஸ் அதிகாரி ஒருவர் கையும் மெய்யுமாக சிக்கிக் கொண்டுள்ளார்.

நுகேகொட சிறுவர், பெண்கள் பரிவின் உதவிப் பொலிஸ் அதிகாரி ஒருவரே இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நபரொருவரிடமிருந்து 5,000 ரூபா இலஞ்சம் வாங்கியபோது சிக்கினார். (ஐ-2)

# கட்சி உறுப்புரிமை நீக்கம்; மத்துமவின் மனு தள்ளுபடி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து தமது உறுப்புரிமை நீக்கப்பட்டமைக்கு எதிராக, ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவினால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

குறித்த மனு, மேல் மாகாண சிவில் மேன் முறையீட்டு மேல் நீதிமன்றத்தில் நேற்று கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, வழக்குக் கட்டணமாக 25 ஆயிரம் ரூபாவை செலுத்துமாறும் ரஞ்சித் மத்தும பண்டாரவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுவின் அனுமதியின் பிரகாரமே ஐக்கிய மக்கள் சக்தி ஸ்தாபிக்கப்பட்டதாக, ரஞ்சித் மத்தும பண்டார தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கியதன் ஊடாக, தாம் உள்ளிட்டவர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்பை மீறவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தாம் உள்ளிட்டவர்களின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்புரிமை நீக்கப்பட்டமை சட்ட விரோதமானது எனவும் இதனால் ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு எடுத்த தீர்மானத்திற்கு தடையுத்தரவைப் பிறப்பிக்குமாறும் ரஞ்சித் மத்தும பண்டாரவினால் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் அண்மையில் தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

இதற்கமைய, கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் தமது மனு தள்ளுபடி செய்யப்பட்டமை சட்டத்திற்கு புறம்பானது எனக் குறிப்பிட்டு, மேல் மாகாண சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்தில் ரஞ்சித் மத்தும பண்டார மேன்முறையீடு செய்திருந்தார்.

இதன்படி, தன்னால் முன்வைக்கப்பட்ட மேன்முறையீட்டு மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள அனுமதி வழங்குமாறும், தமது உறுப்புரிமையை நீக்குவதற்கு ஐக்கிய தேசிய கட்சியினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு தடை உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறும் ரஞ்சித் மத்தும பண்டார கோரியிருந்தார்.

இதற்கமைய, குறித்த மேன்முறையீட்டு மனு மேல் மாகாண சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்தில் நேற்று கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)




# கனத்த மழையினால் பல பகுதிகள் நீரில் மூழ்கி போக்குவரத்து பாதிப்பு



(கொழும்பு)

நாட்டின் தென்கடல் பகுதியில் நிலைகொண்டுள்ள தாழமுக்கம் காரணமாக நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் தற்போது நிலவும் கடும் மழையுடனான சீரற்ற காலநிலை மேலும் நீடிக்குமென வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. இதனடிப்படையில் கேகாலை மாவட்டத்தின் தெஹியோவிட பிரதேசத்தில் 219 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. அத்துடன் காலியில் சில பிரதேசங்களில் 160 மில்லிமீற்றர் மழை வீழ்சியும் களுத்துறை மாவட்டத்தின் சில பிரதேசங்களில் 117 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் இரத்தினபுரி பறக்கடுவ பிரதேசத்தில் 106 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் கம்பஹா பகுதியில் 100 மில்லி மீற்றருக்கு அதிகமான மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாக வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

அதிக மழை காரணமாக கொழும்பின் பல்வேறு பகுதிகள் நீரில் மூழ்கின. இதனால் பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டன. 15 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

காலி மாவட்டத்தில் மழை நீர் பெருக்கெடுப்பையடுத்து நியாகம பாலத்திற்கு அடியில் பாதுகாப்புக் கருதி ஒதுங்கிய மூவர் நீரில் சிக்கியுள்ளனர்.

உயிருக்காகப் போராடிய இவர்கள் காலி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு இராணுவ வீரர்களால் காப்பாற்றப்பட்டுள்ளனர். இவர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டதாக காலி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு பிரதி பணிப்பாளர் லெப்டினன்ட் கேணல் இந்துக்க விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ஜ-4)

# வவுனியாவில் வீசிய கடும் காற்றினால் பப்பாசிச் செய்கை பாதிப்பு



(வவுனியா)

வவுனியா கோதண்டர் நொச்சிகுளம் பகுதியில் நேற்றையதினம் வீசிய பலத்த காற்றினால் அதிகளவான பப்பாசிச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் நேற்று மாலை வீசிய காற்றுடன் கூடிய மழையினால் பல்வேறு பகுதிகளில் மரங்கள் சரிந்து வீழ்ந்துள்ளதுடன், விவசாய செய்கையும் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் கோதண்டர் நொச்சிகுளம் பகுதியில் வீசிய கடும் காற்று காரணமாக இருவேறு இடங்களில் செய்கை பண்ணப்பட்டிருந்த இரண்டு ஏக்கர் அளவிலான பப்பாசி செய்கை முற்றாக அழிவடைந்துள்ளது.

இதனால் பல இலட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். (4-5-299)



# பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்காக களமிறங்கியுள்ள டெங்கு ஒழிப்பு உதவியாளர்கள்

(பொழும்பு)

பொதுச் சுகாதார பரிசோதகர்களின் தொழிற்சங்க நடவடிக்கைக்கு அகில இலங்கை டெங்கு ஒழிப்பு உதவியாளர் சங்கம் ஆதரவு வழங்கியுள்ளது.

அதனடிப்படையில் சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலயத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் செயற்பட்ட டெங்கு ஒழிப்பு உதவியாளர்கள் கொவிட்-19 தொற்றை கட்டுப்படுத்தும் அனைத்துக் கடமைகளில் இருந்து விலகிக்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

குறித்த சங்கத்தின் செயலாளர் சுராங்க தர்ஷன இதனை தெரிவித்துள்ளார். (ஜ-4)

மக்களை மையப்படுத்திய "என் கனவு யாழ்"
செயல்திட்ட வரைவு இன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும்...



## இராசிபலன்

22.07.2020
ஆடி 07, புதன்கிழமை
துதியை முன்னிரவு 8.49 மணிவரை
ஆயிலியம் முன்னிரவு 9.12 மணிவரை
சுபநேரம் 4.31-6.01 மணிவரை
இராகுகாலம் 12.01-01.31 மணிவரை
சந்திராஷ்டமம்- உத்தராடம், திருவோணம்

வளவன்


மேஷம்

அழகு சாதனப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொட்ட காரியங்கள் வெற்றி தரும்.


ரிஷபம்

சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், உறவினர்கள் உங்களின் முன்னேற்றத் தில் அதிக அக்கறை காட்டுவார்கள்.


மிதுனம்

கடினமான வேலைகளைக்கூட நய மாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.


கடகம்

பயணங்கள் கைகூடும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கௌரவமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.


சிம்மம்

வேலைச்சுமை அதிகரிக்கும் நாள், பய ணங்களின் போது விழிப்புணர்வு அவசி யம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், விருந்தினர்களின் சந்திப்புண்டு.


கன்னி

குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


துலாம்

செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், குடும்பத்தில் சுகம், சந்தோசம் அதிக ரிக்கும் நாள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், போசன சுகமுண்டு.


விருச்சிகம்

புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர் கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், விருந்தினர் வரு கையுண்டு, பயணங்களால் பலனுண்டு.


தனுசு

கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது.


மகரம்

கொடுத்த வாக்கை கடைசி நேரத்தில் காப்பாற்றுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


கும்பம்

குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவ மொன்று இடம்பெறலாம், கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர் கள், சயன சுகக் குறைவான நாள்.


மீனம்

வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், எண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், உதிரி வருமானங்கள் வந்து சேர லாம், வழிபாட்டு சிந்தனை மேலோங் கும் நாள்.

உனது மனது எப்பொழுதும் இலேசாக இருக்கும்படி பார்த்துக்கொள்

# கொரோனாவை அடுத்து அதிகரித்துள்ள எலிக்காய்ச்சல்

(கொழும்பு)

**லெப்டோஸ்பிரோசிஸ் எனப்படும் எலிக்காய்ச்சல் நோயால் மொத்தம் 23 ஆயிரத்து 371 நோயாளிகள் இந்த வருடத்தின் கடந்த வெள்ளிக்கிழமை வரையான காலப்பகுதியில் அடையாளம் காணப்பட் டுள்ளனர்.**



அத்துடன் இந்த ஆண்டில் 10 இற்கும் மேற்பட்டோர் இந்த நோயால் உயிரிழந்தமையும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதிக எண்ணிக்கையிலான நோயாளிகள். 3 ஆயிரத்து 284 பேர் கொழும்பு மாவட் டத்தில் இருந்து பதிவாகியுள் ளதாக தொற்றுநோயியல் பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த மாதம் மே, பெப்ர வரி மற்றும் ஜனவரி மாதங்க ளில் அதிக எண்ணிக்கையி லான நோயாளிகள் இனம் காணப்பட்டனர் என்பது குறிப் பிடத்தக்கது. (ஐ-4)

# ஜனாதிபதிக்கு கொலை அச்சுறுத்தல்

(கொழும்பு)

பூஸா சிறைச்சாலைக்கு மாற்றி அனுப்பப்பட்ட குற்றவா ளிகளான கொஸ்கொட தாரக, பொடி லெசி உட்பட்ட குழுவினர் ஜனாதிபதி, பாதுகாப்பு செயலா ளர் உட்பட சிறைச்சாலை அதி காரிகளுக்கு கொலை அச்சுறுத் தல் விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் குற்ற விசார ணைத் திணைக்களம் விசா ரணை ஒன்றை ஆரம்பித்துள் ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நேற்று முன்தினம் உதவி பொலிஸ் அத்தியட்சகர் மெரில் ரஞ்சன லாமாஹேவா உட்பட குற்ற விசாரணைத் திணைக் களக் குழுவினர் சிறைச்சாலை தலைமையகத்திற்கு வந்து உயர் அதிகாரிகளிடம் வாக்கு மூலம் ஒன்று பதிவு செய் துள்ளதாக குறிப்பிடப்பட்டுள் ளது.

கொஸ்கொடதாரக ஹிக்க டுவே பொடிலெசி பிட்டிகல் கெவுமா உட்பட பாதாள உலகக் குழுத் தலைவர்கள் சிலர் தங் களை பூஸா சிறைச்சாலைக்கு அனுப்புவதற்கு எதிர்ப்பு வெளி யிட்டு உணவுப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

அதனை ஆராய்வதற்காக சிறைச்சாலையின் உயர் அதி காரிகள் கடந்த மாதம் 26 ஆம் திகதி பூஸாவிற்கு சென்றுள் ளனர்.

அங்கு ஜனாதிபதி, பாதுகா ப்பு செயலாளர் உட்பட அதிகா ரிகள் தங்களுக்கு பெரிதல்ல எனவும் ஆயுதங்கள் மற்றும் உறுப்பினர்களுடன் தங்கள் வலயமைப்பு தொடர்ந்து இய ங்குவதாக கூறி சிறைச்சாலை அதிகாரிகளுக்கு கொலை அச்சு றுத்தல் விடுத்த தாரக லெசி உட்பட குழுவினர் குழப்பம் ஏற்படுத்தும் வகையில் செயற் பட்டுள்ளனர்.




இந்த சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது. (ஐ-4)

# தபால்மூல வாக்களிப்பு நேற்றுடன் நிறைவு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்த லுக்கான தபால்மூல வாக்க ளிப்பு நேற்றுடன் நிறைவு பெற் றது. கடந்த 13 ஆம் திகதி ஆரம்ப மான தபால்மூல வாக்களிப்பு நேற்றுடன் நிறைவுக்கு வந்தது.

குறித்த தபால்மூல வாக்க ளிப்பு மிகவும் அமைதியான முறையில் சுமுகமாக நடை பெற்றது.




கொரோனா அச்சத்திற்கு மத்தியிலும் வாக்காளர்கள் எல்லோரும் சுகாதார நடை முறைகளைப் பின்பற்றி மிகவும் ஆர்வத்துடன் வாக்களித்த னர்.

இதேவேளை தபால்மூல வாக்களிப்புக்காக இம்முறை தான் அதிக காலம் வழங்கப்பட் டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட் டுள்ளது. (ஐ-5)

# அரசமண்டபம் தகர்ப்பு; விசாரணைகள் நிறைவு

(கொழும்பு)

குருநாகல் பகுதியில் காண ப்பட்ட புவனேகபாகு அரச மண் டபம் இடிக்கப்பட்டமை தொடர் பில் ஆராய்வதற்காக நியமிக் கப்பட்ட குழுவின் விசாரணை கள் நிறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, விசாரணை தொடர்பான இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக தொல் பொருள் திணைக்கள பணிப் பாளர் நாயகம் பேராசிரியர் செனரத் திஸாநாயக்க தெரிவித் துள்ளார். குருநாகல் இராச தானி மன்னனாக செயற்பட்ட இரண்டாம் புவனேகபாகு மன் னனின் அரச மண்டபம் குரு நாகல் மேயரி னால் அண் மையில் இடிக்கப்பட்டது.

இந்த நிலையில், குறித்த விடயம் தொடர்பில் ஆராய் வதற்காக பிரதமர் மகிந்த ராஜ பக்ஷவினால் கடந்த 17 ஆம் திகதி ஐவர் அடங்கிய குழு வொன்று நியமிக்கப்பட்டது.

இதற்கமைய, இது தொட ர்பான அறிக்கையை எதிர் வரும் 23 ஆம் திகதிக்கு முன் னர் சமர்ப்பிக்குமாறும் பணிப் புரை விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# இராணுவ அழுத்தங்களுக்கு அடி பணியாது பல்கலைக்கழக விரிவுரையாளர் பதவியை இராஜினாமா செய்தமை வரவேற்கத்தக்கது

## விரிவுரையாளர் குருபரன் குறித்து கஜேந்திரகுமார்



(யாழ்ப்பாணம்)
யாழ். பல்கலைக்கழக சட்ட விரிவுரையாளர் குருபரன் இராணுவத்தினரின் அழுத்தங்களுக்கு அடிபணியாது தனது பதவியை இராஜினாமாச் செய்தமையை வரவேற்பதாக தெரிவித்துள்ள தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இன்றுவரை இந்த விடயத்தில் பல்கலைக்கழக சமூகம் கண்டும் காணாமல் இருப்பது வருத்தமளிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் சட்டவிரிவுரையாளர் குமாரவடிவேல் குருபரன் வடக்கு -கிழக்கில் இராணுவத்தினரால் பொது மக்களுக்கு ஏற்படுத்தப்படும் இன்னல்களுக்கும் கொடூரமான தாக்குதல்களுக்கும் எதிராகக் குரல் கொடுத்து வந்தார். இராணுவத்தினர் செய்த அட்டூழியங்களுக்கு எதிராக அவர்களுக்கு எதிராக சட்டரீதியாக பல நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தார்.

இராணுவம் தமிழ் மக்களுக்கு எதிராக செயற்படும் போது எவ்வித தயக்கமும் இன்றி முன்னின்று செயற்பட்டு வந்தவர். இவரது இந்தச் செயற்பாடுகளை பொறுத்துக்கொள்ள முடியாத இராணுவமும் இனவாதிகளும் அவருக்கு எதிராக பல காய்நகர்த்தல்களை முன்னெடுத்தனர்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சியிலேயே யாழ். பல்கலைக்கழகத்தின் சட்ட விரிவுரையாளராக கடமையாற்றிக் கொண்டு நீதிமன்ற வழக்குகளில் ஆஜராக முடியாது என முட்டுக்கட்டை போட்டனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு இராணுவத்தரப்பு பல அழுத்தங்களையும் பிரயோகித்தன. அதன் தொடர்ச்சி தற்போதைய கோட்டாபயவின் கொடூர ஆட்சியிலும் தொடர்கின்றது.

சட்ட விரிவுரையாளராக கடமையாற்றிய குருபரன் மீதான அடக்குமுறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியை முடக்குவதற்கு இனவாதிகளால் எடுக்கப்பட்டிருக்கும் முதலாவது முயற்சியே ஆகும்.

தற்போது நாட்டில் இராணுவ மயம் தலைவிரித்தாடுகின்றது. இவ்வாறான நிலையில் யாழ்.பல்கலைக்கழக சட்ட விரிவுரையாளர் எடுத்த முடிவு வரவேற்கத்தக்க விடயம். அரசின் இனவாத கெடுபிடிகளுக்கு அரசாங்கத்திற்கு எதிராக சட்ட



ரீதியான செயற்பாடுகளை அவர் இன்னும் தீவிரப்படுத்த வேண்டும்.

இதேவேளை பல்கலைக்கழகச் சமூகம் இன்றுவரை இது தொடர்பில் அக்கறையில்லாது இருப்பது வருத்தமளிக்கின்றது என அவர் தெரிவித்தார். (ஜ-4)

## வடமராட்சியில் கனமழை; வெங்காயச் செய்கையாளர்கள் பாதிப்பு



(கரணவாய்)
வடமராட்சிப் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை கடும் மழை பொழிந்ததன் காரணமாக வெங்காய செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அண்மைய நாட்களாக வடமராட்சி பகுதியில் கடும் வெப்ப நிலை வீசிய நிலையில் நேற்று திங்கட்கிழமை மாலை இடியுடன் கூடிய கன மழை பெய்தது. செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சில இடங்களில் வெங்காய பயிர்களை மூடி வெள்ளம் தேங்கி நின்ற நீரினை, நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் விவசாயிகள் வெளியேற்றினர்.

கடும் மழை காரணமாக வெங்காயச் செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டுடன் பல சிரமங்களையும் எதிர்கொண்டு வருகின்றனர். (4-5-60)

## செம்புலம் 3வது பிரதேச மலருக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)
வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக பண்பாட்டுப்பேரவையால் வருடாந்தம் வெளியிடப்படும் செம்புலம் - 3வது பிரதேச மலருக்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன.

ஆக்கங்கள் யாவும் பிரதேசம் சார்ந்த வாழ்வியல், அபிவிருத்தி, வரலாறு, விவசாயம், மருத்துவம் மற்றும் சமூகம் சார் பண்பாட்டினை வெளிப்படுத்துவதாக அமைய வேண்டும்.

ஏ4 தாளின் 5-10 பக்கங்களுக்குட்பட்டதாகவும் சுயமாக எழுதப்பட்டதாகவும் ஏற்கனவே பிரசுரமாகாத ஆக்கமாகவும் இருக்க வேண்டும்.

சிறுகதைகள் ஏ4 தாளின் 3-5 பக்கங்களுக்குட்பட்டதாகவும் கவிதை ஏ4தாளின் ஒரு பக்கத்தில் எமது பண்பாட்டினை எடுத்தியம்புவதாகவும் அமைய வேண்டும். ஆக்கங்கள் யாவும் அரசியல் கலப்பற்றதாக அமைய வேண்டும்.

ஆக்கங்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்க கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ தலைவர், வலிகாமம் கிழக்குப் பண்பாட்டு பேரவை, பிரதேச செயலகம் கோப்பாய் என்ற முகவரிக்கோ அல்லது இணையத்தளத்திற்கோ அனுப்பி வைக்குமாறும் மேலதிக விபரங்களுக்கு 021 223 0011 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கோப்பாய் பிரதேச செயலாளர் திருமதி.சுபாஜினி மதியழகன் அறிவித்துள்ளார். (5)

## யாழ்.மாநகர சபையின் நினைவூட்டல்

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாநகர சபை தொழில்நுட்ப உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்ட கள விஜயத்தின் போது நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கட்டட அனுமதி பெறப்பட்டதாக தெரிவிக்கப்பட்டமைக்கு அமைவாக நகர அபிவிருத்தி அதிகார சபையில் பெறப்பட்ட கட்டட அனுமதி இலக்கம், திகதி என்பவற்றினை யாழ்.மாநகர சபையின் பௌதீக திட்டமிடல் கிளையில் சமர்ப்பிக்குமாறு யாழ்.மாநகர சபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் அறிவித்துள்ளார். (5)

## விண்ணப்பித்தவர்கள் உறுதிப்படுத்திக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)
வடமாகாண கல்வித்திணைக்களத்தின் கீழ் இயங்குகின்ற மும்மொழிக் கற்கை நிலையத்தில் 2019/2020 கல்வி ஆண்டில் சிங்கள மொழிப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்து இதுவரை தெரிவு செய்யப்படாதவர்கள் 23.07. 2020 முதல் யாழ்.கலட்டி இராமநாதன் வீதி மும்மொழிக் கற்கை நிலைய அலுவலகத்தில் நேரில் சமுகமளித்து தங்கள் பெயர்களை உறுதிப்படுத்தி நேர அட்டவணையைப் பெற்றுக் கொள்ளுமாறும் எதிர்வரும் 10.08. 2020 முதல் கற்கை நெறிகள் ஆரம்பமாகவுள்ளன எனவும் மும்மொழிக் கற்கை நிலையப் பதில் பணிப்பாளர் பி.என்.சுதர்ஷன் அறிவித்துள்ளார். (5)

## ரயில் மோதி 16 மாடுகள் சாவு

(சாவகச்சேரி)
தென்மராட்சி-மிருசுவில் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 10 மணியளவில் புகையிரதம் மோதியதில் 16 மாடுகள் பலியானதுடன் ஒரு மாடு காயமடைந்துள்ளது.

கொழும்பில் இருந்து யாழ்.நோக்கி வந்த புகையிரதமே மிருசுவில்-ஆசைப் பிள்ளை ஏற்றம் பகுதியில் ரயில் பாதையில் கிடந்த மாடுகளை மோதியது. (4-5-30)

## விபத்துக்களில் இருவர் காயம்

(சாவகச்சேரி)
சாவகச்சேரி நகர் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் காயமடைந்தார்.

குறுக்கு வீதி ஒன்றின் ஊடாக மோட்டார் சைக்கிளில் வந்த குறித்த பெண் ஏ-9 வீதியில் ஏற முற்பட்ட போது ஏ-9 வீதியால் வந்த பேருந்து மோதியதில் இவ் விபத்து ஏற்பட்டது.

இதில் மீசாலை தெற்கைச் சேர்ந்த தே.சொரூபவாணி என்ற பெண் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

அதேவேளையில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை சாவகச்சேரி -தனங்கிளப்புச் சந்தியில் வானுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

விபத்துக்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-5-30)

# வாக்குமூலம் பெறுவதற்கு றிசாத் இடைநிறுத்தப்பட்டால் ஏனையவர்களின் உரிமைகளை மீறுவதாகும்

## பதில் பொலிஸ்மா அதிபர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக வாக்குமூலம் பெற்றுக்கொள்ள றிசாத் பதியுதீனை அழைப்பது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டால், தற்போது காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாக அமையும் எனப் பதில் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர்கள் றிசாத் பதியுதீன் மற்றும் ரவி கருணாநாயக்க ஆகியோர் மீதான விசாரணையை தேர்தல் நிறைவடையும் வரை ஒத்திவைக்குமாறு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் நேற்று முன்தினம் கோரிக்கை விடுத்தது.



இந்நிலையில் பதில் பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு எழுதியுள்ள பதில் கடிதத்திலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# இந்தியாவில் இருந்து வந்த பூனையால் கொரோனா ஆபத்து

(கொழும்பு)

இந்திய உயர்ஸ்தானிகர் உட்பட 19 பேர் கடந்த 18 ஆம் திகதி இந்தியாவில் இருந்து இலங்கை வந்துள்ளனர்.

இவர்களில் உயர்ஸ்தானிகருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை நடத்தப்படவில்லை என்பதுடன் ஏனைய 18 பேருக்கு பி.சி. ஆர்பரிசோதனை நடத்தப்பட்டுள்ளதாக கட்டுநாயக்க விமான நிலையத்தின் தலைமை அதிகாரி தெரிவித்துள்ளார்.

மேலும் இந்தக் குழுவில் வந்த பெண்ணொருவர் பூனை ஒன்றை நாட்டுக்குள் கொண்டு வந்துள்ளார்.

அதனைக் கொண்டுவர பேராதனை விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் அனுமதி வழங்கியிருந்தது.

தனிமைப்படுத்தல் சட்டத்திற்கு அமைய இந்த பூனையின் இரத்த மாதிரிகள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ள போதிலும் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளதா? என்பது குறித்த பரிசோதனை நடத்தப்படவில்லை.

விலங்குகள் மூலமும் கொரோனா வைரஸ் பரவலாம் என்பதால், இது ஆபத்தான நிலைமை என விமான நிலையத்தின் அதிகாரி ஒருவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

# அனைத்துக் கடற்படையினரும் குணமடைவு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்த மேலும் 3 கடற்படையினர் பூரண குணமடைந்து வைத்தியசாலையிலிருந்து வெளியேறியுள்ளனர்.

இதற்கமைய கொரோனா தொற்றிலிருந்து, அனைத்துக் கடற்படையினரும் பூரண குணமடைந்துள்ளதாகவும் கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் இதுவரையில் மொத்தமாக 906 கடற்படையினர் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 6 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், மொத்த நோயாளிகளின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 730 ஆக பதிவாகியுள்ளது.

இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்களில் 5 பேர் சவுதி அரேபியாவில் இருந்து நாடு திரும்பியவர்கள் என்றும் ஒருவர் ராஜாங்கனை நோயாளியுடன் தொடர்புடையவர் என்றும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து 2 ஆயிரத்து 41 பேர் குணமடைந்துள்ளதோடு 678 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் 119 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருவதுடன், 11 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# தொல்பொருள் பிரதேசங்கள் அழிவடையும் அபாயத்தில்

## அகிலவிராஜ் அச்சம்

(கொழும்பு)

13 ஆம் நூற்றாண்டில் குருநாகல் பகுதியை ஆண்ட புவனேகபாகு மன்னனினால் கட்டப்பட்ட மண்டபத்தை பாதுகாக்க தொல்பொருள் துறை பணிப்பாளர் தவறியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

மேலும் தற்போதைய தொல்பொருள்துறை பணிப்பாளர் கடந்த காலங்களிலும் தொல்பொருள் இடங்களைப் பாதுகாக்கத் தவறியுள்ளதாக அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இப்பகுதியில் அமைந்துள்ள ஏனைய தொல்பொருள் இடங்களும் அழிக்கப்படும் அபாயத்தை எதிர்கொள்வதாக அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார். (ஜ-4)




# மன்னார் கடலில் மீனவர்கள் மீது கடற்படை தாக்குதல்

# ஒருவர் படுகாயம், மீனவர்கள் எதிர்ப்புப் போராட்டம்

(மன்னார்)

**மன்னார் கடற்பரப்பில் மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல் மேற்கொண்டமையை கண்டித்து மீனவர்கள் ஒன்று கூடி தமது கண்டனத்தை தெரிவித்தனர்.**





மேற்படி சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது.

மன்னார் பிரதான பாலத்திற்கு அருகில் உள்ள கடற்படை காவலரனில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை மீனவர்கள் தொழிலுக்குச் செல்லும் தமது ஆவணங்களைச் சமர்ப்பித்து உரிய அனுமதியுடன் மீன் பிடிக்கச் சென்றுள்ளனர்.

இந்த நிலையில் தொழிலுக்குச் சென்ற படகு ஒன்றை கடலில் வைத்து இடை மறித்த சிவில் உடையில் இருந்த கடற்படையினர் ஆவணத்தைப் பரிசீலினை செய்ய ஆவணங்களைக் கோரியுள்ளனர். இந்த நிலையில் ஆவணங்களை வழங்குவதற்கு முன்னரே கடற்படையினர் குறித்த படகில் இருந்த மீனவர்களைக் கடுமையாக தாக்கியுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான மீனவர்கள் சக மீனவர்களுக்கு தகவல் வழங்கியதோடு, கடற்கரைக்கு திரும்பினர். பின்னர் கடும் காயங்களுக்கு உள்ளான மீனவர் உடனடியாக மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்த நிலையில் மீனவர்கள் கடற்கரையில் ஒன்று கூடி தமது எதிர்ப்பை தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு வந்த மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மீனவர்களுடன் கலந்துரையாடினார்.

தொடர்ச்சியாக மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் போது மன்னார் பிரதான பாலத்தில் இருந்து மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பகுதி வரை சுமார் மூன்று இடங்களில் தாங்கள் முழுமையாக சோதனைக்கு உட்படுத்தப்படுவதாகவும் இதனால் தங்களால் உரிய நேரத்தில் மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் உள்ளதாகவும் மீனவர்கள் குற்றம் சுமத்தினர்.

அத்துடன் நேற்று வழமை போல் கடற்றொழிலுக்குச் சென்ற நிலையில் கடல் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட கடற்படையினர் தங்களை தாக்கி, அச்சுறுத்தியதாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் குற்றம் சுமத்தினர்.


நேற்று தாங்கள் இரண்டு படகுகளில் கடலுக்குச் சென்றதாகவும் அதில் தங்களுக்குரிய உரிய அனுமதிப் பத்திரங்கள் மாற்றிமாற்றி வைக்கப்பட்டமையினால் ஆவணக்களைப் பெறுவதற்கான இரு படகுகளையும் ஒன்றாக இணைத்து ஆவணங்களைச் சரிப்படுத்தி கொண்டதாகவும் அதை பார்த்த கடற்படையினரே தங்களைச் சந்தேகத்தின் பெயரில் கடுமையாக தாக்கியதாகவும் அதில் ஒரு மீனவர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் சக மீனவர்கள் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு வந்த மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாதிக்கப்பட்ட மீனவர்களுடன் கலந்துரையாடி குறித்த பிரச்சினையை சுமுக நிலைமைக்குக் கொண்டு வந்தார். அத்துடன் மீனவர்கள் கடற்படையினரினால் தாக்கப்பட்டமை தொடர்பாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்ட மீனவர்களால் முறைப்பாடும் மேற்கொள்ளப்படுள்ளது. (5)

# நல்லூர் உற்சவ காலத்தில் பின்பற்ற வேண்டிய அறிவுறுத்தல்கள்

(யாழ்ப்பாணம்)

தற்போது நாட்டில் நிலவுகின்ற கொரோனா (COVID-19) தொற்று நோய் அபாய சூழ் நிலையில், இவ்வருடம் ஆரம்பமாகவுள்ள நல்லூர் கந்தன் ஆலய பெருந்திரு விழாவில் சுகாதார அமைச்சினால் காலத்திற்கு காலம் வெளியிடப்படும் சுகாதார சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள், அத்துடன் யாழ்.மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் மற்றும் யாழ்ப்பாணம் மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரிகளினால் விடுக்கப்படும் சுகாதார நடைமுறைகளைக் கருத்திற்கொண்டு பின்வரும் அறிவுறுத்தல்களை நல்லூர் உற்சவ காலங்களில் ஆலய சுற்றாடல்களில் அடியார்களை இறுக்கமாக கடைப்பிடிக்குமாறும் சுகாதார அமைச்சினால் விடுக்கப்படும் அறிவுறுத்தல்களிற்கேற்றவாறு நடைமுறைகளில் மாற்றம் அல்லது தளர்வுகள் பற்றி அவ்வப்போது அடியார்களுக்கு அறிவிக்கப்படும் எனவும் யாழ்.மாநகர சபையால் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அவ் அறிவுறுத்தல்கள் பின்வருமாறு.

1. நல்லூர் உற்சவ காலத்தில் சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலின் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட அடியார்களே உரிய நேரத்தில் வழிபாடு செய்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

2. வழமை போன்று இவ்வருடமும் 23.07.2020 நள்ளிரவு தொடக்கம் 20.08.2020 நள்ளிரவு வரை வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டு அமுலில் இருக்கும். வீதித் தடைக்கான வாகன அனுமதி அட்டைகள் மாத்திரம் மாநகர சபையால் வழங்கப்படும்.

3. வீதித் தடைகள் தொடர்ந்து அமுலில் இருக்கும் காலத்தில் கடந்த காலத்தைப் போன்று மாற்று ஏற்பாடுகள் இம்முறையும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

4. அடியவர்கள் ஆலயத்திற்கு வருகைதரும் போது தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு அல்லது வாகன அனுமதிப்பத்திரம் இவற்றில் ஏதாவது ஒன்றை ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக கண்டிப்பாக உடன் எடுத்து வரவேண்டும். இவற்றில் ஏதாவது ஒன்று வீதித் தடையில் ஒவ்வொரு தடவையும் பதிவு செய்யப்பட்டு அனைவரிடம் உட்செல்ல அனுமதிக்கப்படுவர்.

5. வீதித் தடைகளூடாக ஆலயத்திற்கு வருகை தரும் அடியவர்கள் எப்போதும் முகக் கவசம் (MASK) அணிந்திருத்தல் கட்டாயமானதாகும்.

6. ஆலயத்திற்குள் உள் நுழைவதற்கு முன்னர் கைகளைக் கழுவிச் சுத்தம் செய்ய வேண்டும்.

7. ஆலயத்திற்கு உள்ளேயும் வெளியேயும் தனியார் சமூக இடைவெளியினைப் பின்பற்றி வழிபாடுகளை மேற்கொள்ளுதல் தனிப்பட்ட ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும்.

8. அடியவர்கள் ஆசாரசீலர்களாக ஆலயத்திற்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

9. வெள்ளை சிவப்பு கொடி நாட்டப்பட்ட ஆலய வளாகத்தில் பாதணிகள் அணிவது தடை செய்யப்பட்டுள்ளது.

10. அடியவர்கள் ஆலயத்தினுள் நீண்ட நேரம் தரித்து நிற்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

11. கொரோனா தொற்று பாதிப்பு காரணமாக சுயதனிமைப்படுத்தல் அல்லது கட்டாய தனிமைப்படுத்தலிற்கு ஏற்கனவே உட்படுத்தப்பட்டு காலம் முடிவுற்ற பின்னர் அடியவர்கள் ஆலயத்திற்கு வருகை தரும் பட்சத்தில் தனிமைப்படுத்தல் முடிவுற்ற காலத்தில் வழங்கப்பட்ட மருத்துவச் சான்றிதழ்களை தம்முடன் கொண்டு வருதல் வேண்டும். முக்கியமாக வெளிநாடுகளில் இருந்து வருகை தந்தவர்கள் தனிமைப்படுத்தல் மருத்துவச் சான்றிதழினை எப்போதும் தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்.

12. வயோதிபர்கள், நோயாளர்கள், சிறு குழந்தைகள் தங்களது தனியார் சுகாதார நலன் கருதி ஆலயத்திற்கு வருகை தருவதை இயன்ற வரையில் தவிர்த்தல் நன்று.

13. (COVID-19) அறிகுறிகள் (காய்ச்சல், தடிமன், தும்மல், இருமல் போன்றன) காணப்படுபவர்கள் ஆலயத்திற்கு வருகை தருவதைத் தவிர்ப்பது நன்று.

14. ஆலயச் சுற்றாடலில் வீதிகளில் மண்டபப்படி வைத்தல், பிரசாதம் வழங்கல், தாகசாந்தி, அன்னதானம் வழங்குதல் போன்றன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

15. தற்போதும் நாட்டில் நிலவுகின்ற COVID-19 அசாதாரண சூழ்நிலையில் அங்கப் பிரதட்சணம் செய்தல், அடி அழித்தல், கற்பூரச் சட்டி எடுத்தல், காவடி, தூக்குக் காவடி எடுத்தல் போன்ற நேர்த்திக் கடன்களின்போது கொரோனா கட்டுப்பாடு தொடர்பான சுகாதார நடைமுறைகளை முறையாக கடைப்பிடிக்க முடியாத சூழல் ஏற்படுவதால் இவ்வருடம் மேற்படி நேர்த்திக்கடன்களை ஆலய வளாகத்திலும், அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் மேற்கொள்ளுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

16. ஆலய சுற்றாடலில் மற்றும் ஆலயத்தை அண்டிய பகுதியில் அடியார்கள் மற்றும் பொது மக்கள் கூடுவதற்கான தெய்வீக சொற்பொழிவுகள், தெய்வீக இசை அரங்குகள், கலை நிகழ்வுகள் மற்றும் பொழுது போக்கிற்கான அனைத்து நிகழ்வுகளும் இவ்வருடம் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

17. ஏற்கனவே ஆலயச் சூழலில் இயங்கி வந்த கடைகள் தொடர்ந்தும் இயங்குவதற்கு அனுமதிக்கப்படும். எனினும் இயங்கிவரும் வியாபார நிலையங்களை விரிவாக்க அனுமதி இல்லை.

18. ஆலயச்சூழலில் உள்ள வெற்றுக்காணிகளிலோ அல்லது கட்டடங்களிலோ புதிய கடைகள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

19. ஆலய பெருந்திருவிழாவின் போது ஆலய சுற்றாடலில் சுகாதார நடைமுறைகளை முறையாக பின்பற்ற தவறும் பட்சத்தில் அல்லது மீறுபவர்களின் மீது சுகாதார நடைமுறைகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

20. தற்போதைய சூழ்நிலையில் வழங்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்காமை, மீறுகின்றமை போன்றவற்றால் ஏற்படக் கூடிய அசௌகரியங்களைக் கருத்திற் கொண்டு அனைவரும் முழுமையான ஒத்துழைப்பினை வழங்குமாறு யாழ். மாநகர பதில் முதல்வர் து.ஈசன் தெரிவித்துள்ளார். (5)

# தனியார் பேருந்து சாரதிகள் வேலை நிறுத்தத்தில்

(நீர்கொழும்பு)
நாடு முழுவதிலும் உள்ள தனியார் பேருந்து சாரதிகள் நேற்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். குறிப்பாக வழமை போல சேவையில் ஈடுபடும் பேருந்துகளில் 50 சதவீதமே சேவையில் ஈடுபடுத்தப்படும் என தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.
இந்நிலையில் தனியார் பேருந்துக் கட்டணங்களின் அதிகரிப்பிற்கு அனுமதிகோரியே மேற்படி வேலை நிறுத்தம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# பொறுப்பதிகாரிக்கு இடமாற்றம்

(கொழும்பு)
நாடாளுமன்ற பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி கே.எல்.லியனகே குறித்த பதவியிலிருந்து இடமாற்றப்பட்டுள்ளார்.
இதற்கமைய பொலிஸ் நிலையத்தின் சாதாரண கடமைகளை மேற்கொள்வதற்காக அவர் பதவி மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை 17 பொலிஸ் உத்தியோகத்தர்கள் உடன் அமுலாகும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அனுமதியின் பிரகாரமே இவ்வாறு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.(ஜ-4)


## ஊதுவர்த்திக்குச்சிகள் விற்பனைக்கு

விற்பனைக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட பத்திக்குச்சிகள் பல அளவுகளில் எம்மிடம் உள்ளன. அத்துடன் வாசனைப் பொருட்கள், பெட்டிகள், உங்கள் விற்பனையை மேம்படுத்தும் ஆலோசனைகள் - ஆதரவுகள் என்பன எம்மால் வழங்கப்படும்.
குச்சி விலை - 260

**காவேரி தொழிலகம்**
**புனித கயித்தார் கோவிலடி,**
**மாரீசன்கூடல் இளவாளை.**
**0703107250,0779672462**

(3372)



## அறிவித்தல்
## கேள்வி கோரல்

2ம் மாடி, கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவு சபை, **A-9** வீதி, கிளிநொச்சி என்னும் முகவரியில் இயங்கிவரும் வடமாகாண சிக்கன கடன்வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனம் முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட சிக்கன கடன்வழங்கும் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் மல்லிகைத்தீவு நந்திக் கடற்கரை புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு என்ற முகவரியில் அமைந்துள்ள காணியில் 11.00x10.80= 118.80 சதுர மீற்றரில் (1,278.28 சதுர அடி) ஒரு மாட்டுக் கொட்டிலும், **(Cow Shed)** 16 அடி நீளம் 10 அடி அகலத்தில் ஒரு களஞ்சிய அறையும் அமைப்பதற்கான கேள்வி கோரப்படுகின்றது. இவ்வேலைகளுக்கான விபரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் வடமாகாண சி.க.கூ. சம்மேளன அலுவலக கடமை நேரத்தில் பெற்று பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 06.08.2020 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் சம்மேளனக் காரியாலயத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**சு.கணபதிப்பிள்ளை**
தலைவர்
வடமாகாண சி.க.கூ.ச.ச.சம்மேளனம்

**தொலைபேசி: 0213134680**
**0762666619**

(C-9929)


# மின்னல் தாக்கி ஒருவர் பலி!

(நீர்கொழும்பு)
நீர்கொழும்பு - குட்டிடுவா பிரதேசத்தில் மின்னல் தாக்கத்திற்கு இலக்காகி நபரொருவர் உயிரிழந்துள்ளார். குறித்த சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் நீர்கொழும்பு கொச்சிக்கடை பகுதியை சேர்ந்த 47 வயதுடைய நபரே மரணமடைந்துள்ளார். இம் மின்னல் தாக்கத்தினால் மேலும் இருவர் படுகாயமடைந்து நீர்கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக நீர்கொழும்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஜ-4)


## தேர்தல் காலங்களில் பொதுச்சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துவது பற்றி உங்களுக்கு தெரியுமா?

அரச வாகனங்கள், உலங்கு வானூர்தி உள்ளிட்ட போக்குவரத்து வசதிகளை பயன்படுத்தல்,
அரச மற்றும் கூட்டுத்தாபன ஊழியர்கள்,
அரச கட்டிடங்கள் மற்றும் பொது நிதி செயற்திட்ட மற்றும் அனர்த்த உதவிகளை பகிர்ந்தளித்தல்,
அரச நியமனங்கள், பதவி உயர்வு மற்றும் இடமாற்றம் செய்தல்

**போன்ற பொதுச் சொத்துக்களை தவறான முறையில் பயன்படுத்துவது உங்களது வரிப்பணத்தை துஷ்பிரயோகம் செய்வதாகும்.**



**முறைப்பாடுகளுக்கு**
தேர்தல் காலங்களில் பொதுச்சொத்துக்களை தவறாக பயன்படுத்துதல் பற்றிய தகவல்கள் பிரஜைகளா-கிய உங்களிடம் காணப்படின் உறுதிப்படுத்தக்கூடிய சாட்சிகளுடன் எமக்கு அனுப்பிவையுங்கள்.
(தகவல்களின் இரகசிய தன்மை பேணப்படும்)

முகவரி
**பொதுச் சொத்துக்களை பாதுகாக்கும் வேலைத்திட்டம்**
**ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா, 5/1, எலிபேங்க் வீதி, கொழும்பு 05**

தொலைநகல்
011 250 1707

துரித அழைப்பு
076 322 3442 076 322 3662

இணையம்: **apesalli.lk**
மின்னஞ்சல்: **pppr@tisrilanka.org**

(C-967)

தேர்தல் காலங்களில் பொதுச்சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துவது தண்டனைக்குரிய குற்றமாகும்.


# நன்றி நவில்தல்



**சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையத்தினால் நிர்மாணிக்கப்பட்டு வரும் பழனியானந்தன் முன்பள்ளியின் கீழ் மாடியினை நிர்மாணிப்பதற்கு நிதியுதவியினை வழங்கிய வைத்திய நிபுணர்கள், வணிகர்கள் மற்றும் நலன்விரும்பிகளுக்கு எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**பழனியானந்தன்**
**சனசமூக நிலையம்**

(3373)

# வட இலங்கைச் சங்கீத சபை
## யாழ்ப்பாணம்
## NORTH CEYLON ORIENTAL MUSIC SOCIETY - JAFFNA
## செய்முறை/எழுத்துப் பரீட்சைகள் – 2020

வட இலங்கைச் சங்கீத சபையினால் 2020 ஆம் ஆண்டுக்கான பரீட்சைகள் செப்டெம்பர் - நொவம்பர் மாதங்களில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சுகாதாரத் திணைக்களத்தினால் இப்பரீட்சை தொடர்பில் வழங்கப்பட்ட **COVID-19** தொடர்பான முழுமையான அறிவுறுத்தல்களுக்கும் ஆலோசனைகளுக்கும் அமைவாக இப் பரீட்சைகள் உரிய பரீட்சை நிலையங்களில் நடத்தப்படும்.
பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் சகல பரீட்சார்த்திகளுக்கும் தபால்மூலமாக உரிய காலத்தில் அனுப்பி வைக்கப்படும்.

**நேர அட்டவணை:**

**1. சகல மட்டங்களுக்குமான (தரங்கள்) செய்முறைகள்:**
**2020 செப்டெம்பர் மாதம் 05,06, 12,13, 19,20 26,27 மற்றும் ஒக்டோபர் 3,4 ஆம் திகதிகள்**

**2. சகல மட்டங்களுக்குமான (தரங்கள்) எழுத்துப் பரீட்சைகள்:**
**07.11.2020, 08.11.2020 (சனி, ஞாயிறு)**

யாழ்ப்பாணம், நல்லூர், மானிப்பாய், வட்டுக்கோட்டை, கொக்குவில், மருதனார்மடம், பருத்தித்துறை, சாவகச்சேரி, அச்சுவேலி, பதுளை, கண்டி, ஹற்றன், திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, கொழும்பு-04, கொழும்பு-06, கொழும்பு-13 ஆகிய பிரதேசங்களில் பரீட்சை நிலையங்கள் செயற்படும்.
செய்முறைக்குத் தோற்றுவோர் நாள் ஒன்றுக்கு ஒரு குழுவில் ஆகக்கூடியது 15 பரீட்சார்த்திகள் மாத்திரம் 20 நிமிடங்களுக்கு ஒருவர் என்ற அடிப்படையில் பரீட்சிக்கப்படுவர். சகல பரீட்சார்த்திகளும் **COVID-19** தொடர்பில் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

செ. சந்திரராஜா
யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர்
தலைவர், வட இலங்கைச் சங்கீத சபை -யாழ்ப்பாணம்.

(C-9930)

# 1921 முதல் இன்று வரை வடமாகாண பாராளுமன்றத் தேர்தல்களும் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும்

**11**

**கலாநிதி க.தவலிங்கம்**
தவிசாளர்-எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



தேர்தல் முடிவுகளை பழைய தேர்தல் முறையில் பார்க்கும்போது 2000 ஆம் ஆண்டுத் தேர்தலில் வடக்கு மாகாணத்தின் வன்னி மாவட்டத்தில் உள்ள 2 தொகுதிகளில் (மன்னார்,

அட்டவணை 23 இலங்கை பாராளுமன்றத் தேர்தல், 2000
வன்னி தேர்தல் மாவட்டம்

| தொகுதி | TELO | தேசிய ஐக்கிய முன்னணி | ஐக்கிய தேசியக் கட்சி | மக்கள் கூட்டணி (PA) | அளிக்கப்பட்ட வாக்குகள் | பதிவு செய்யப்பட்ட வாக்காளர் |
|---|---|---|---|---|---|---|
| மன்னார் | 9.580 | 1,821 | 1,695 | 350 | 22417 | 68,468 |
| முல்லைத்தீவு | 0 | 0 | 182 | 439 | 682 | 53,054 |
| வவுனியா | 11,325 | 2,294 | 8,335 | 5,110 | 46477 | 91,589 |
| தபால் வாக்குகள் | 518 | 165 | 406 | 424 | - | - |
| இடம்பெயர்வு வாக்கு | 282 | 11557 | 927 | 1514 | - | - |
| மொத்த வாக்குகள் | 21,705 | 15,837 | 11,545 | 7,837 | 89,797 | 213,111 |
| சதவீதம் | 26.09% | 19.09% | 13.88% | 9.42% | | |
| ஆசனங்கள் | 3 | 1 | 1 | 1 | - | - |

அட்டவணை 24 இலங்கை பாராளுமன்றத் தேர்தல், 2000
வன்னி தேர்தல் மாவட்டம் தேர்தலில் வெற்றியடைந்தவர்கள்

| தெரிவுசெய்யப்பட்டவரின் பெயர் | கட்சி | விருப்பு வாக்குகள் |
|---|---|---|
| செல்வம் அடைக்கலநாதன் | தமிழீழ விடுதலை இயக்கம் | 15,490 |
| சுப்ரமணியம் நோகராதலிங்கம் | தமிழீழ விடுதலை இயக்கம் | 10,959 |
| இராசு குகனேஸ்வரன் | தமிழீழ விடுதலை இயக்கம் | 6,789 |
| நூர்டீன் மசூர் | தேசிய ஐக்கிய முன்னணி | 12,283 |
| சாந்த குமார புஞ்சிஹேவா | ஐக்கிய தேசியக் கட்சி | 3,975 |
| பிரேமரத்னகே சுமதிபால | மக்கள் கூட்டணி (PA) | 5,205 |

மற்றும் வவுனியா)

தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி **(TULF)** உம் 1 தொகுதியில் (முல்லைத்தீவு - 439 வாக்குகள்) மக்கள் கூட்டணி **(PA)** உம் வெற்றி பெற்றன

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கம் 2001

விடுதலைப் புலிகள், தம்மைத் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாக அறிவித்துக்கொண்டிருந்தாலும், அதற்கான மக்கள் அங்கீகாரத்தின் வெளிப்பாடு என்ற ஒருவிடயம் இருக்கவில்லை. புலிகளுக்கு எதிராக (தமிழ்) அரசியல்வாதிகள் மேற்கொண்ட தீவிரமான பரப்புரையால் சர்வதேச ரீதியில் புலிகள் தலைகுனிவிற்குள்ளானார்கள்.

போர்முனையில் புலிகள், உலகமே வியக்கும் சாதனைகளை நிலைநாட்டினாலும், தமது கொள்கை நிலைப்பாட்டையும், ஆயுதப் போராட்டத்தின் நியாயத்தையும் சர்வதேசத்திடம் முன்வைத்து, அதனை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கு இந்தப் பரப்புரைகள் பெரும் தடையாயிருந்தன.

அப்போதுதான் ஜனநாயக அரசியல்வாதிகளின் பலத்தைப் புலிகள் உணர்ந்துகொண்டார்கள். எனவே தான் தமிழ் ஜனநாயகத் தலைமைகள் அனைவரையும் ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து தமது குரலாக அவர்களை மாற்ற வேண்டிய தேவை புலிகளுக்கு எழுந்தது.

இந்தச் சூழல் பின்புலத்தில்தான், தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகியவற்றை ஒன்றிணைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

2001 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் 2001 ஒக்டோபர் 20 இல் நான்கு கட்சிகள் இணைந்து இக்கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் ஆர்.சம்பந்தன், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் ந.குமரகுருபரன், ரெலோ கட்சியின் தலைவர் என். சிறிகாந்தா, ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டனர்.

நான்கு கட்சிகளும் இணைந்து செயற்படுவது என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னம் தமது பொதுச் சின்னமாக இருக்கும் என்றும் தேர்தல் ஆணையாளருக்கு இந்நான்கு கட்சிகளின் செயலாளர்களும் கூட்டாக அறிவித்திருந்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஓர் அரசியல் கட்சியாக இலங்கை தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்படாமையினால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர் விடுதலைக் கூட்டணியின் சூரியன் சின்னத்தில் 2001 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டது.

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலாவது (2001) தேர்தல் விஞ்ஞாபனம்

தமிழர் ஒரு தேசிய இனம், அவர்களின் தாயக பிராந்திய ஒருமைப்பாடு அங்கீகரிக்கப்பட வேண்டும், தமிழ் தேசத்தின் சுயநிர்ணய உரிமை, ஏனைய இனங்களுக்கு இருக்கும் அனைத்து உரிமைகளும் தமிழ் மக்களுக்கு இருக்க வேண்டும் என்ற நான்கு விடயங்களை வலியுறுத்தியிருந்த இந்தத் தேர்தல் விஞ்ஞாபனம் தமிழர் பிரதேசத்தின் மீது விதிக்கப்பட்டிருக்கும் பொருளாதாரத் தடை நீக்கப்பட வேண்டும் என்றும் போர் நிறுத்தம் செய்யப்பட்டு விடுதலைப் புலிகளுடன் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

நான்கு கட்சிகள் சேர்ந்து அமைத்திருக்கும் இந்தக் கூட்டணிக்கான மக்கள் அங்கீகாரத்திற்கான தேர்தலாகவும் இதை தாம் பார்ப்பதாக தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு வைத்து உரையாற்றிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் ஆர்.சம்பந்தன் தெரிவித்தார்.

இந்தக் கூட்டணி பற்றி தமிழ்-ஆங்கில பத்திரிகைகளும் செய்திகளை வெளியிட்டன. வடக்கு-கிழக்கில் வாக்காளர் மத்தியில் இக்கூட்டணி பாரிய தாக்கம் செலுத்தும் என்ற எதிர்பார்ப்பும் வலுவடைய ஆரம்பித்தது.

எதிரும் புதிருமாக செயற்பட்டு வந்த தமிழ்க் கட்சிகள் ஒரே அணியில் இணைந்து தேர்தலில் போட்டியிட முன்வந்தது தமிழ் மக்கள் மத்தியில் பெரும் உற்சாகத்தை கொடுத்திருந்தது.

வேட்புமனுத் தாக்கல் செய்த பின் நவம்பர் 4ஆம் திகதி திருகோணமலையில் நடைபெற்ற முதலாவது தேர்தல் பிரசாரக்கூட்டத்திற்கு பெருந்தொகையான மக்கள் சமுகமளித்திருந்தனர். இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட தலைமை வேட்பாளர் ஆர்.சம்பந்தன் தமிழ் மக்கள் மத்தியில் சில வாக்குறுதிகளை வழங்கினார்.

விடுதலைப்புலிகள் மீது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விதிக்கப்பட்ட தடையை நீக்குவதற்கு இக் கூட்டணி நடவடிக்கை எடுக்கும் என்றும் தமிழ் மக்களின் விடுதலையை நோக்கிய இலட்சியத்தை அடைவதற்காக தொடர்ந்து போராடும் என்றும் உறுதியளித்தார். திருகோணமலை சிவன் கோவிலடியில் நடந்த இந்தத்தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ரெலோ தலைவர் என்.சிறிகாந்தா, ஈ.பி.ஆர்.எல்.எவ்.தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரும் உரையாற்றினர்.

அதேபோன்று நவம்பர் மாதம் 21ஆம் திகதி மூதூர் பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரத்தில் சம்பந்தன் உரையாற்றும் போது இத்தேர்தல் வடக்கு கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கையை மக்கள் ஏற்றுக் கொள்கிறார்களா? என்பதற்கான சர்வஜன வாக்கெடுப்பாக இருக்கும் எனத் தெரிவித்தார்.

நவம்பர் 28ஆம் திகதி யாழ்ப்பாணம் தீவுப்பகுதிக்கு பிரசாரத்திற்கு சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீது காடையர் பாரிய தாக்குதலை நடத்தினர். இத்தாக்குதலில் இரு பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் மாவை.சேனாதிராசா, சிவாஜிலிங்கம், சுரேஷ் பிரேமச்சந்திரன் உட்பட 20க்கும்மேற்பட்டோர் காயமடைந்தனர். 1994ஆம் ஆண்டு தொடக்கம் யாழ். மாவட்டத்தில் தனிக்காட்டு ராஜாக்களாக இருந்த ஈ.பி.டி.பிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வரவு பெரும் அச்சத்தை கொடுத்தது.

இறுதித் தேர்தல் பிரசாரக்கூட்டம் 2001டிசெம்பர் 2ஆம் திகதி யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோவிலடியிலும் திருகோணமலை சிவன் கோவிலடியிலும் மட்டக்களப்பு காந்திசிலை மைதானத்திலும் நடைபெற்றது. காடையரின் தாக்குதலில் படுகாயமடைந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் மாவை.சேனாதிராசா கட்டுக்களுடன் சக்கர நாற்காலியில் யாழ்ப்பாணத்தில் நடந்த இறுதிப் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இளம் வேட்பாளராக அறிமுகமான கஜேந்திரகுமார் ரவிராஜ் ஆகியோரும் இந்த இறுதி பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

### இலங்கை பாராளுமன்றத் தேர்தல் 2001

மக்கள் கூட்டணி அரசில் இருந்து ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் விலகியதை அடுத்து அரசு பெரும்பான்மையை இழந்தது. 11ஆவது பாராளுமன்றத் தேர்தல் இடம்பெற்று ஓராண்டுக்குள் அரசுத் தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அதனைக் கலைத்து புதிய தேர்தலுக்கான அறிவித்தலை விடுத்தார். 22 தேர்தல் மாவட்டங்களுக்குமாக அரசியலமைப்பின் 98(8) ஆம் உப உறுப்புரைக்கமைய இப் பாராளுமன்றத் தேர்தலுக்கு செல்லுபடியான 2000 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் தேர்தல் மாவட்டங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்த வாக்காளர்களின் எண்ணிக்கைக்கமைய தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை (196) 2001.07.02 ஆம் திகதி தேர்தல்கள் ஆணையாளரினால் பிரகடனப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்திற்கு 9 ஆசனங்களும் வன்னி மாவட்டத்திற்கு 6 ஆசனங்களும் ஒதுக்கப்பட்டிருந்தது.

2001 இலங்கை பாராளுமன்றத் தேர்தல் இலங்கையின் 12ஆவது பாராளுமன்றத்திற்கு 225 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 2001, டிசெம்பர் 6 இல் இடம்பெற்றது.

### யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம் 2001

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு **(TULF, TELO,ACTC,EPRLF(S))** போட்டியிட்டு 6 இடங்களை வென்றது. ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி **(EPDP)** போட்டியிட்டு 2 இடங்களை வென்றது. ஐக்கிய தேசிய முன்னணி **(UNP)** போட்டியிட்டு ஒரு இடத்தை வென்றது.

ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி **(DPLF- PLOTE)**, ஜனநாயக இடதுசாரி முன்னணி, ஐக்கிய சோசலிசக் கட்சி, புதிய இடதுசாரி முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி, சிங்கள பாரம்பரியக் கட்சி, சுயேட்சைக் குழு போட்டியிட்டன. ஆனால் அவற்றால் ஒரு ஆசனத்தைக் கூட பெற முடியவில்லை.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட 2001ஆம் ஆண்டுத் தேர்தல் முடிவுகள் அட்டவணை-25 மற்றும் 26இல் காட்டப்பட்டுள்ளன.

(தொடரும்....)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## சிவகரந்தையும் கொட்டைக்கரந்தையும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

கொட்டைக்கரந்தை சற்றேறக்குறை சிவகரந்தைக்கு ஒப்பெனினும் மணத்தில் சிவகரந்தை சிறப்புடையது. கொட்டைக்கரந்தை, சிவகரந்தை இவ்விரண்டும் மருந்துவகைகளிற் சிறந்தது. இரண்டும் உருவவியலில் வேறுபட்டதாக இருப்பினும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மருத்துவத் தாவரங்களாகும்.

**கொட்டைக்கரந்தை**

**Botanical Name :- Sphaeranthus indicus**

**Family:- Asteraceae**

**சிவகரந்தை**

**Botanical Name :- Sphaeranthus amaranthoides**

**Family:- Asteraceae**

சிவகரந்தையானது ஓராண்டு வாழக்கூடிய 30 செ.மீ உயரம்வரை வளரக்கூடிய ஓடியுடன் பல கிளைகளை விடக் கூடியதும், உருளைவடிவ தண்டுகளையுடையதுமான செடியாகும். தனியிலை, எதிரிலை அடுக்கம் கொண்டவை. 2.5-4.5 செ.மீ நீளமும், 2-4 செ.மீ அகலமுடையதும் கோளவடிவானதும் இலையின் அடிப்பகுதி கூராகவும் இருக்கும், தண்டுகளில் உரோமம் காணப்படும், சிறிய பூக்கள் மஞ்சள், நிறமானவை. ஈரலிப்பான வாய்க்கால் நீரோட்டங்களின் இரு மருங்கிலும் வளர்ந்து பரம்பிக் காணப்படும். மிகுந்த நறுமணம் கொண்ட செடியாகும்.

கொட்டைக்கரந்தையானது ஓராண்டுச் செடியாகும். ஆனால் ஒன்றுவிட்ட இலை அமைப்பைக் கொண்டது. கிட்டத்தட்ட 30 செ.மீ உயரம் வரை வளரக்கூடியது. இலையில் மேற்புறமும், கீழ்ப்பக்கமும் மென்மையான உரோமங்கள் காணப்படும்.

இருபாலான பூக்கள், ஊதாநிறம் கொண்டவை. கொட்டைக்கரந்தையானது நெல் அறுவடைக்குப் பின்பு வயல்களில் தானாக வளரக்கூடிய வாசனை கொண்ட செடியாகும்.

கொட்டைக்கரந்தை தனைக் கடசாம லுண்டவர்க்கு

வெட்டை தணியுமதி மேகம்போற்-துட்டச்

சொறி சிரங்கு வன் கரப்பான் நோற்றாது நாளும்

மறிமலமுந் தானிற்கு மால்.

கொட்டைக்கரந்தையால் ஒழுக்கு வெள்ளை கரப்பான், சொறி, சிரங்கு தீரும். மறிபட்ட எருவும் கழியும் மேலும் வாத நோய் ஒழியும் தோற்பிணியும் தீரும்.

**சிவகரந்தை**

வாந்திய ரோசகத்தை மாற்றும் பசி கொடுக்குஞ்

சாய்ந்த விந்து வைகட்டுந் தப்பாதே -ஏந்தழகைத்

தண்டா துறச்சேர்க்குஞ் சார்ந்த பரிமளத்தைத்

தண்டார் சிவகரந்தை தான்

மணமுள்ள சிவகரந்தை வமனம், அருசி(சுவையை உணரமுடியாமை) விந்து வெளியேற்றம், ஷீணவாதம், கரப்பான், வாதநோய்கள், இருமல், பசியின்மை, இவைகளை போக்கும். பசியை சீராக்கி, வனப்பையும் (அழகையும்) உண்டாக்கும்.

இதற்கு சிவகரந்தை இலைகளை சேகரித்து நன்கு கழுவி நிழலில் உலர்த்தி, பொடித்து, அரித்து 4-8 கிராம் அளவு வெண்ணெய் சேர்த்துத் தினம் ஒருவேளை சாப்பிட்டுவர மேற்கூறிய நோய்களை நீக்கும். தொடர்ந்து 48 நாட்கள் சாப்பிடலாம்.

சிவகரந்தையானது இந்திய சித்த மருத்துவ நூல்களைவிட யாழ்ப்பாண சித்த மருத்துவ முறைகளில் மருந்து தயாரிப்பதில் முக்கிய மூலிகையாக திகழ்கின்றது.தோல் வியாதிகளில் பயன்படும் மருந்துகளில் இது முக்கியமாக சேர்க்கப்படுகிறது. அதாவது இரத்தத்தை சுத்திகரிக்கும் தன்மை இதற்குண்டு.

மிக வாசனையுடைய ஒரு மூலிகையாகும். இளவயதில் நரை ஏற்படுபவர்கள்கூட இம்மூலிகையை பயன்படுத்தலாம். இதனை நறுங்கரந்தை எனவும் குறிப்பிடுவர்.

இரத்தத்திலுள்ள மாசுக்களையகற்றி சொறி, சிரங்கு, கரப்பான் முதலிய தோல் நோய்களை நீக்குவதற்கு சிவகரந்தைச் சூரணத்தை (பொடியை) பயன்படுத்தலாம். இதற்கு பூக்கள் விரிவதற்கு முன்னதாக (அப்போதுதான் இரசாயனச் சத்துக்கள் நிறைவாகக் காணப்படும்) செடிகளை வேருடன் சேகரித்து நன்றாக கழுவி சுத்தம் செய்து நிழலில் உலர்த்தி அரிந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

இந்த சூரணத்தை அல்லது பொடியை தினமும் காலை, மாலை 2 கிராம் அளவு சிறிது பனை வெல்லம் சேர்த்து சாப்பிட்டு வர மேற்படி தோல் வியாதிகள் நீங்கும். இரத்தமும் சுத்திகரிக்கப்படும்.

**இளநரையை போக்க**

சிவகரந்தைச் செடி, கரிசாலை இரண்டும் ஒரேயளவாக எடுத்து நன்றாகக் கழுவி நிழலில் உலர்த்தி பொடித்து 1-2 கிராம் அளவு எடுத்து பாலில் எடுக்க (40 நாட்கள்) நரைமுடி கருமையாகி வரும்.

பங்கசு தொற்றால் ஏற்படும் தோல்வியாதிகட்கும் சிவகரந்தைச் சூரணம் சிறந்த மருந்தாகும்.

இதற்கு அதிவிடயம், கஸ்தூரிமஞ்சள், கோட்டம், நன்னாரி, தாமரைப்பூ, வசுவாசி, கராம்பு, நெல்லிவற்றல் ஒவ்வொன்றும் 5 கிராம் அளவு எடுத்து எல்லாம் சேர்த்து எடைக்கு நிகராக சிவகரந்தைச் செடி உலர்ந்தது சேர்த்து காலை, மாலை சாப்பிட மேற்படி தோல் வியாதிகள் நீங்கும்.

அடிக்கடி பங்கசு தொற்றால் தோல் வியாதிகள் ஏற்பட்டால் சிவகரத்தை உடன் இலைகளை கண்டிச் சாப்பிடலாம்.

சிவகரந்தை உடன் சாறு 30 மில்லியை 200 மில்லி காய்ச்சிய பசுப் பாலுடன் கலந்து அருந்தினால் இருமல் நீங்கும்.

தலைமுடி கருமையாக வளர்வதற்கு சிவகரந்தைப் பொடி 50 கிராமும் கொட்டைக்கரந்தைப் பொடி 50 கிராமும் எடுத்து 700 மில்லி தேங்காய் எண்ணெயில் கலந்து கொதிப்பித்து பதத்தில் இறக்கி ஆறவிட்டு தலைக்கு பூசி வரலாம்.

சுசநோய் உள்ளவர்கள் கொட்டைக்கரந்தை இலைகளை சேகரித்து கழுவி நிழலில் உலர்த்தி பொடித்து 2 கிராம் அளவு காலை, மாலை தேனில் உட்கொண்டுவர நல்ல பலனைக் கொடுக்கும்.

கொட்டைக்கரந்தை மூலிகையின் முழுச் செடியையும் சேகரித்து உலர்த்தி பொடிசெய்து வேளைக்கு 4 கிராம் அளவு தேனுடன் சாப்பிட்டுவர பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை சாய்தல் நோய் குணமாகும்.

அத்துடன் தோலில் ஏற்படும் நமைச்சல் அல்லது கடியும் குணமாகும். கொட்டைக்கரந்தை செடியை குடிநீராகக் காய்ச்சி 30-60 மில்லி தினமும் பருகியும் வரலாம்.

கொட்டைக்கரந்தை பூக்களை மட்டும் சேகரித்து நிழலில் உலர்த்தி தினமும் 2 கிராம் அளவு 48 நாட்கள் சாப்பிட்டுவர உடல் குளிர்ச்சியாகி தேக பலத்தையும் கொடுக்கும்.

குடற்புழுக்களை வெளியேற்ற கொட்டைக்கரந்தை வேர்களை மட்டும் சேகரித்து கழுவி உலர்த்தி பொடித்து தினமும் காலை, மாலை 2 கிராம் அளவு 6 நாட்களுக்கு மிளகு, வல்லாரைக் காம்பு, வெற்றிலைக்காம்பு அவித்த நீரில் கலந்து சாப்பிட குடற்புழுக்கள் வெளியேறும்.



கொட்டைக்கரத்தை



சிவகரந்தை

# மண்சரிவு எச்சரிக்கை நீடிப்பு

(கொழும்பு)

நாட்டின் பல பகுதிகளில் சில தினங்களுக்கு பரவலாக மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக சப்ரகமுவ, மத்திய, தென் மற்றும் வடமேல் மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக அத்திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.


வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று நேற்று செவ்வாய்க்கிழமை வெளியிட் டுள்ள அறிக்கையிலேயே இதனை தெரிவித்துள்ளது. நாட்டின் ஏனைய பிரதேசங்களில், பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் அத்திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேநேரம் மேல், சப்ரகமுவ, மத்திய, தென் மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் 75 மி.மீ.இற்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும் என்பதோடு மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்களுக்கு அத்திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, கொழும்பு, களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி மற்றும் காலி மாவட்டங்களுக்கான மண்சரிவு எச்சரிக்கை சில தினங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் பெய்த கன மழையைத் தொடர்ந்து தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் நேற்று முன்தினம் காலை 9 மணிமுதல் நேற்றுக்காலை 9 மணிவரை குறித்த மாவட்டங்களுக்கான மண்சரிவு எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)




# வேலூர் சிறையில் நளினி தற்கொலை முயற்சி



(வேலூர்)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் வேலூர் பெண்கள் சிறையில் உள்ள நளினி தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற முருகன் வேலூர் ஆண்கள் சிறையிலும், அவருடைய மனைவி நளினி பெண்கள் சிறையிலும் அடைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் 28 ஆண்டுகளுக்கும் மேலாக தண்டனை அனுபவித்து வருகிறார்கள்.

இந்த நிலையில் வேலூர் பெண்கள் சிறையில் உள்ள நளினி தற்கொலைக்கு முயன்றுள்ளார்.

சக கைதியுடன் ஏற்பட்ட வாக்குவாதத்தால் அறையில் துணியால் கழுத்தை நெரித்து தற்கொலைக்கு முயன்றதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கிடையே வாக்குவாதத்தில் சிறைக்காவலர் ஒருவர் தலையிட்டதாலேயே நளினி தற்கொலைக்கு முயன்றதாக அவரது சட்டத்தரணி புகழேந்தி தெரிவித்துள்ளார். (2)

# 6 இலட்சத்து 13 ஆ

# கொரோனா உயிரிழ

## திணறும் உலக நாடு

(ஜெனீவா)

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதல் எண்ணிக்கை 6 இலட்சத்து 13 ஆயிரத்தை கடந்துள்ளது மாகாணம் வுகான் நகரில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த வைரஸ் தற்போது உல பிரதேசங்களுக்கு பரவி பெரும் மனித பேரழிவை ஏற்படுத்த

# சந்தனக் கடத்தல் வீரப்பன் மகளுக்கு பா.ஜ.கவில் மாநிலப் பதவி



(சென்னை)

சந்தனக் கடத்தல் வீரப்பன் கடந்த 2004 ஆம் ஆண்டு அதிரடிப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வீரப்பன் - முத்துலட்சுமி தம்பதிக்கு விஜயலட்சுமி, வித்யாராணி என்ற இரண்டு மகள்கள் உள்ளனர்.

இதில் வித்யா ராணி சட்டத்தரணி உள்ளார். இவர் அண்மையில் பாரதிய ஜனதா கட்சியின் (பா.ஜ.க) மேலிட பொறுப்பாளர் முரளிதர ராவ் முன்னிலையில் பா.ஜ.கவில் இணைந்துள்ளார்.

இந்நிலையில், வீரப்பனின் மகள் வித்யா ராணிக்கு பா.ஜ.கவில் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

மாநில இளைஞர் அணி துணைத் தலைவராக வித்யா ராணி நியமனம் செய்யப்பட்டுள்ளார். (2)

# ஒக்ஸ்போர்ட் பல்கலையின் கொரோனாத் தடுப்பூசி இந்தியாவிலும் பரிசோதனை



(லண்டன்)

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ள கொரோனாத் தடுப்பூசி சோதனை விரைவில் இந்தியாவிலும் பரிசோதிக்கப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளன.

அதற்கான உரிமம் விரைவில் பெறப்படும் என சோதனையை நடத்தவுள்ள புனேசீரம் இன்ஸ்டியூட் ஒப் இந்தியா தெரிவித்துள்ளது.

அத்துடன் பெரிய எண்ணிக்கையில் அதை உற்பத்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளதாக சீரம் இன்ஸ்டியூட் ஒப் இந்தியாவின் தலைவர் அடார் பூனாவால்லா தெரிவித்துள்ளார்.

மனிதர்களிடம் நடத்தப்பட்ட முதற்கட்ட சோதனையில் இந்த தடுப்பூசி சாதகமான பலனை தந்துள்ளதுடன், நோய் எதிர்ப்புக்கான T செல்களையும் உருவாக்குவதாக பிரபல மருத்துவ இதழான தி லான்செட் ஏற்கனவே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

# சிட்டுக்குருவிக்காக இருளில் வாழும் கிராம மக்கள்

(சிவகங்கை)

சிட்டுக்குருவிகள் கூடு கட்டினால் ஊருக்கு நன்மை பெருகும் என்ற நம்பிக்கையில், மின் இணைப்பு பெட்டியில், கட்டப்பட்டிருந்த கூட்டை கலைக்காமல், இருளில் வாழ்ந்து வருகிறது ஒரு கிராமம்.

சிவகங்கை மாவட்டம் மறவமங்கலம் அருகே உள்ளது பொத்தகுடி கிராமம். இங்குள்ள மின் கம்பத்தில் தெருவிளக்கு இணைப்புப் பெட்டியில் குருவிக்கூடு கட்டி, முட்டையிட்டு அடை காத்து வந்தது. இதையறிந்த கிராமத்து இளைஞர்கள், அதைப்பாதுகாக்க தொடங்கினர்.

தெருவிளக்குகள் எரிய மொத்தக் கட்டுப்பாட்டு ஆழிகளும் குருவிக் கூடு கட்டிய மின் இணைப்பு பெட்டியில் இருப்பால், ஆழியை திறக்க செய்யக் கூட முடியவில்லை. ஆழியை போட்டால் குருவி பறந்து விடும் என்பதால், கடந்த 30 நாட்களுக்கும் மேலாக தெரு விளக்குகள் எரியாமல் இருளில் வாழ்ந்து வருகிறார்கள் பொத்தகுடி கிராமமக்கள்.



சின்னஞ்சிறிய குருவிகள் கூடு கட்டினால் நல்ல சகுனம் என்றும், ஊருக்கும் மக்களுக்கும், நன்மை அதிகரித்து, அதிர்ஷ்டம் பிறக்கும் என்று நம்புகின்றனர் அக்கிராம மக்கள்.

மின் கதிர்கள், செல்போன் கோபுரங்களால் சிட்டுக்குருவி இனம் அழிந்து வருவதாக கூறப்படுகிறது. இந்த நிலையில், தேடி வந்த சிட்டுக்குருவி இனத்தை, மனிதேயத்தோடு பாதுகாத்து பொத்தகுடி கிராமமக்கள் எடுத்துக்காட்டாக விளங்குகின்றனர். (2)

# 2100 ஆம் ஆண்டுக்குள் ப

## ஆய்வில் அதிர்ச்சி தகவல்

(ஒட்டாவா)

பருவநிலை மாற்றம் காரணமாக ஆர்ட்டிக் பகுதியில் உள்ள போலார் பனிக்கரடிகள் இனம் 2100ஆம் ஆண்டில் முழுவதும் அழிந்து விடும் என ஆய்வில் அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

ஆர்ட்டிக் பனிப்பிரதேசத்தில் வாழ்ந்து வரும் அரிய வகை விலங்குகளில் ஒன்று போலார் பனிக்கரடிகள். இந்த வகை கரடிகளுக்கு மீன்கள் மற்றும் கடல் சீல்கள் முக்கிய உணவாக உள்ளது.

அரியவகை விலங்கினமான பனிக்கரடி உலகளவில் மொத்தமாக 26 ஆயிரம் என்ற எண்ணிக்கையில் மட்டுமே உயிருடன் உள்ளது. இவற்றைப் பாதுகாக்க பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஆனால், தற்போது உலக வெப்பமயமாதல் காரணமாக பனிப்பிரதேசங்கள் அனைத்தும் வேகமாக உருகி வருகின்றன.

இதனால் பனிப் பிரதேசங்களில் வாழும் பல்வேறு உயிரினங்கள் அழியும் தறுவாயில் உள்ளன. குறிப்பாக பனிக்கரடி அந்தப் பட்டியலில் முன்னிலையில் உள்ளது.

# வெளிநாடு

# ஆயிரம்
# ிழப்புகள்
## ாடுகள்

**குதலுக்கு பலியானோர் ளது. சீனாவில் ஹுபேய் தம் கொரோனா வைரஸ் உலகின் 213 நாடுகள், டுத்தி வருகிறது.**

இந்த வைரஸுக்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்க விஞ்ஞானிகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றனர். அதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது.

கூடிய விரைவில் தடுப்பு மருந்து தயாராகி விடலாம் என்ற தகவல்கள் வெளியாகி வருகின்றன. ஆனால் மற்றொரு புறம் கொரோனாவின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 6 இலட்சத்து 13 ஆயிரத்தை கடந்துள்ளது.

தற்போதைய நிலவரப்படி, 1 கோடியே 48 இலட்சத்து 50 ஆயிரத்து 886 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வைரஸ் பரவியவர்களில் 53 இலட்சத்து 36 ஆயிரத்து 91 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 59 ஆயிரத்து 809 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

கொரோனாவில் இருந்து 89 இலட்சத்து ஆயிரத்து 652 பேர் குணமடைந்துள்ளனர். ஆனாலும், உலகம் முழுவதும் வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 6 இலட்சத்து 13 ஆயிரத்து 143 பேர் உயிரிழந்துள்ளனர். (2)

# தற்கொலைக்குண்டு தாக்குதல் எட்டு ஆப்கான் வீரர்கள் பலி



(காபூல்)

கிழக்கு ஆப்கானிஸ்தானில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற தற்கொலை தாக்குதலில் எட்டு ஆப்கான் இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளதுடன் 9 இராணுவ வீரர்கள் காயமடைந்துள்ளனர். இராணுவ வாகன தொடரணி மீது டிரக் வண்டி மூலம் குறித்த தற்கொலைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தலிபான்கள் மற்றும் உள்ளூர் இஸ்லாமிய அமைப்பொன்றும் பாதுகாப்புப் படைவீரர்கள் மீது தாக்குதலை மேற்கொள்ளும் நோக்கில் செயற்பட்டு வந்ததாக பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பெப்ரவரியில் அமெரிக்காவுடன் சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட போதிலும் தலிபான்கள் ஆப்கானிஸ்தான் முழுவதும் தாக்குதல்களை முடுக்கிவிட்டனர். அந்த ஒப்பந்தம் கிளர்ச்சியாளர்களுக்கும் ஆப்கான் அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தைக்கு பல தசாப்த கால யுத்தத்திற்கு வழிவகுத்தது.

சமாதான ஒப்பந்த காலத்தில் சிறைபிடிக்கப்பட்ட ஆயிரம் அரசாங்க ஊழியர்களை தலிபான்கள் விடுவிப்பதாகவும் அதற்கு ஈடாக 5 ஆயிரம் தலிபான் கைதிகளை விடுவிக்க ஆப்கானிஸ்தான் அரசாங்கமும் இணங்கியிருந்தன.

இதுவரை, அரசாங்கம் 4,200 க்கும் அதிகமானவர்களை விடுவித்துள்ளது. மேலும் தலிபான்கள் 800 பேர் வரை விடுவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# 858 பில்லியன் டொலருக்கான ஒப்பந்தம் உடன்பட்ட ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள்



(பிரஸ்ஸல்ஸ்)

ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் ஒரு பாரிய கொரோனா வைரஸ் பொருளாதார மீட்புப் பணிக்கான ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளனர்.

ஐந்து நாட்கள் நடைபெற்ற கலந்துரையாடல்களுக்குப் பிறகு, ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர்கள் 750 மில்லியன் யூரோ (858 பில்லியன் அமெரிக்க டொலர்) க்கான ஒப்பந்தத்திற்கு ஒப்புக் கொண்டுள்ளனர்.

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரான் இதை, "ஐரோப்பாவின் வரலாற்று நாள்" என்று பாராட்டினார்.

வைரஸால் கடுமையாக பாதிக்கப்படும் நாடுகளுக்கு உதவ பயன்படும் இந்த தொகை, ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒட்டு மொத்த வரவு-செலவுத் திட்டத்தின் ஒரு ஒப்பந்தத்துடன் வருகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை பிரஸ்ஸல்ஸில் ஆரம்பித்த இந்த ஐரோப்பிய ஒன்றிய உச்சி மாநாடு, 2000 ஆம் ஆண்டு பிரான்ஸ் நகரமான நைஸில் நடைபெற்ற மாநாட்டிற்கு பிறகு மிக நீண்ட ஐரோப்பிய உச்சி மாநாடாக மாறியது. இது ஐந்து நாட்கள் நீடித்தது. (2)

# ஹஜ் யாத்திரையில் இம்முறை 1000 பேர் மட்டுமே



(ரியாத்)

சவுதி அரேபியா கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்து வருவதனால் இந்த ஆண்டு சுமார் 1000 முஸ்லிம் யாத்ரீகர்களுக்கு மாத்திரம் ஹஜ் யாத்திரையை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இராஜ்ஜியத்தில் இருக்கும் 70 சதவீத வெளிநாட்டினர், 30 சதவீத உள்நாட்டினர் உள்ளடங்கலான 1000 பேருக்கே இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக ஹஜ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த ஆண்டுக்கான ஹஜ் யாத்திரையானது ஜூலை 29 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக அந் நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். புனித நகரமான மக்காவை மையமாகக் கொண்ட இந்த யாத்திரையில் ஆண்டுதோறும் சுமார் 2.5 மில்லியன் மக்கள் பொதுவாக பங்கேற்பார்கள்.


எனினும் கொரோனா அச்சம் காரணமாக யாத்ரீயர்களின் எண்ணிக்கை இவ்வாறு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஹஜ் யாத்திரை கடுமையான சுகாதார நெறி முறைகளின் கீழ் முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதன் ஒரு பகுதியாக நோய்கள் இல்லாத 65 வயதுக்குட்பட்ட நபர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஹஜ் மற்றும் உம்ரா யாத்திரை உலகம் முழுவதிலுமிருந்து மில்லியன் கணக்கான முஸ்லிம்களை ஈர்க்கின்றன. மேலும் ஆண்டொன்றுக்கு அவரை 12 பில்லியன் டொலர்களையும் வருமானமாக ஈட்டித் தருகின்றது.

இந் நிலையில் இந்த முடிவானது கொரோனாவினால் பாதிக்கப்பட்டுள்ள சவுதி அரேபியாவின் பொருளாதாரத்திற்கு மேலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சவுதி அரேபியாவில் 253,349 கொரோனா தொற்றாளர்கள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், உயிரிழப்புகளின் எண்ணிக்கையும் 2,523 ஆக பதிவாகியுள்ளது. (2)

# பனிக்கரடிகள் இனமே அழிந்து விடும்



பனிப்பிரதேசங்கள் வேகமாக உருகி வருவதால் பனிக் கரடிகள் தங்கள் வாழ்விடங்களையும், உணவுகளையும் இழந்து வருகின்றன. மேலும், அவை மனிதர்கள் வாழும் நிலப்பரப்பு நோக்கி இடம் பெயரத் தொடங்கியுள்ளன.

இந்நிலையில், பருவநிலை மாற்றம், வெப்பமயமாதல் நிலை இப்படியே தொடர்ந்தால் ஆர்ட்டிக் பகுதியில் இருந்து உணவு, தங்குமிடத்திற்காக இடம் பெயர் தலை சந்தித்து வரும் போலார் பனிக்கரடி இனம் 2100ஆம் ஆண்டில் முழுவதும் அழிந்து விடும் என கனடாவின் டொரன்டோ பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் தங்கள் ஆய்வில் கண்டுபிடித்துள்ளனர்.

உலக வெப்பமயமாதல் மற்றும் பருவநிலை மாற்றத்தை தடுக்க தவறும் பட்சத்தில் கூடிய விரைவில் பல்வேறு அரிய வகை உயிரினங்கள் முற்றிலும் அழிந்து விடும் என இந்த ஆராய்ச்சி முடிவில் தெரிவிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# பிற்போக்குவாத சிந்தனைகளுடன் முன்னோக்கிப் பயணிக்க முடியாது

## அரசாங்கத்தை சாடிய தயான் ஜயதிலக

(கொழும்பு)

**தேசிய மற்றும் பெரும்பான்மை இனவாதத்தை முன்னிறுத்தும் ட்ரம்பின் கொள்கைகள் அமெரிக்கர்கள் மத்தியில் எதிர்ப்பை சம்பாதித்திருக்கிறதைப் போன்று எமது நாடும் இத்தகைய இனவாத, மதவாத, இராணுவமய, குடும்பமய பிற்போக்குவாத சிந்தனைகளுடன் முன்னோக்கிப் பயணிக்க முடியாது. தற்போதைய அரசாங்கம் நாட்டு மக்கள் தொடர்பில் எவ்வகையிலும் சிந்திக்காத, அவர்களின் நலன்களை முன்னிறுத்தாத கொள்கைகளையும் செயற்றிட்டங்களையுமே கொண்டிருக்கிறது என்று இராஜதந்திரியான கலாநிதி தயான் ஜயதிலக சுட்டிக்காட்டினார்.**



பொதுத்தேர்தலுக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கைப் பிரகடனத்தை வெளியிடும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை கொழும்பிலுள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சரியானதொரு இலக்கும், கொள்கையுமின்றி சரியான பாதையைச்சென்றடைய முடியாது என்றே அறிஞர்கள் பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர். ஆனால் எமது நாட்டின் அரசியலைப் பொறுத்தவரை அத்தகையதொரு தெளிவான இலக்கும், அதற்கான செயற்றிட்டமும் காணப்படுகின்றதா? என்பது குறித்து சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டியுள்ளது.

அந்த வகையில் சம்பிரதாய அரசியல் கட்சிகளின் இயல்பிலிருந்து சஜித்பிரேமதாஸதலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி எவ்வாறு வேறுபடுகின்றது? சக்தி வாய்ந்த ஸ்திரமான நாடு தொடர்பில் பலரும் பேசுகின்றனர். குறிப்பாகத் தற்போதைய ஆட்சியாளர்களைக் கூறலாம். வரலாற்று ரீதியான அதற்கான தலைமைத்துவத்தை வழங்கியிருப்பதால் அதுபற்றிப் பேசுவதற்கு அவர்களுக்கு உரிமையும் இருக்கிறது.

எனினும் அவர்களின் அரசியல் பேச்சுக்களில் நாடு, இனம், மதம் பற்றி அதிகமாகப் பேசப்படுகிறது. மக்கள் இல்லாத இடத்தில் ஒரு நாடு எவ்வாறு இருக்க முடியும்? நாட்டு மக்கள் தொடர்பில் எவ்வகையிலும் சிந்திக்காத, அவர்களின் நலன்களை முன்னிறுத்தாத, மக்களை நேசிக்காத இலக்கு, கொள்கை, செயற்றிட்டம் ஆகியவையே தற்போதைய ஆட்சியாளர்களிடம் காணப்படுகின்றது. இந்த ஆட்சியாளர்களின் நிர்வாகத்தில் மக்கள் எங்கு நிறுத்தப்படுகிறார்கள் என்ற கேள்வி இருக்கிறது.

தேசியவாதம், நாட்டுப்பற்று தொடர்பில் அதிகம் பேசுகிறது. மற்றொரு தரப்பு தேசியவாதம், நாட்டுப்பற்று என்பவையற்ற நவீனத்துவம் பற்றிப் பேசுகிறது.

எனினும் சஜித் பிரேமதாஸவின் தரப்பினர் நாட்டின் வரலாறு, பல்வகைமைத் தன்மை பற்றி அறிந்து, நாடு குறித்துப் பெருமிதம் கொள்ளும் அதேவேளை நவீனத்துவம் நோக்கிப் பயணிப்பதற்கான செயற்றிட்டங்களைத் தமது தேர்தல் கொள்கைப் பிரகடனத்தில் உள்ளடக்கியிருக்கின்றனர். இனவாத, மதவாத, இராணுவவாத, குடும்பத்தை முன்னிறுத்திய நோக்கங்களும் கொள்கைகளுமே ஆளுந்தரப்பிடம் உள்ளன. அவற்றோடு ஒருபோதும் நவீனத்துவம் நோக்கிப் பயணிக்க முடியாது என அவர் தெரிவித்தார். (ஐ-4)

# 17 பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம்

(கொழும்பு)

தேசிய பொலிஸ் ஆணையகத்தின் ஒப்புதலுடன் 17 பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி பொலிஸ் அத்தியட்சகர், பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் இருவருக்கும் ஒன்பது உப பொலிஸ் அத்தியட்சகர்களுக்கும் நான்கு பொலிஸ் பரிசோதகர்களுக்கும் இரு பிரதி பொலிஸ் பரிசோதகர்களுக்கும் இவ்வாறு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# இராணுவ சீருடைகள் உட்பட ஏராளமான ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

வலஸ்முல்லாவில் உள்ள போவாலா பகுதியில் உள்ள ஒரு வீட்டில் இராணுவ சீருடைகள், வெடி மருந்துகள், துப்பாக்கி, இரண்டு வாள் மற்றும் ஒரு கைக்குண்டு ஆகியவற்றுடன் நேற்று முன்தினம் பிற்பகல் பாதாள உலகக் கும்பல் உறுப்பினரின் நெருங்கிய சகா ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் வலஸ்முல்லாவின் போவாலாவில் வசிக்கும் உதேனி கிரியா (வயது-58) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அவர் முன்னாள் இராணுவ வீரர் ஆவார். வலஸ்முல்லா போவாலா பகுதியில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரின் வீட்டின் அறையில் அலுமாரியின் கீழ் பதுங்கு குழியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட டி- பீஸ் வெடிமருந்து துப்பாக்கி,10 5ரி-56 நேரடி வெடிமருந்துகள், 21 ரி-56 தாக்குதல் தோட்டாக்கள், 2 எல்.எம்.ஜி வெடிமருந்து சுற்றுகள், 8 எ.ஸ்.ஜி நேரடி வெடிமருந்துகள் , 2 வாள்,5 காமா ரி-ஷேர்ட்கள், இராணுவ அதிகாரிகள் பயன்படுத்தும் 5 மதிய உணவுப் பெட்டிகள், தொப்பி, 4 உடல் பட்டைகள், 3 ஆர்.டி ஹெல்மெட், ஒரு ரி-56 ஆயுதம் சுத்தம் செய்யும் கிட், மூன்று பெரிய பேட்ஜ்கள், இராணுவ சீருடைகள் மற்றும் ஒரு ஜோடி இராணுவ பூட்ஸ் என்பன மீட்கப்பட்டன. (ஐ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## சும்மா இருக்கின்ற சங்கை....!

சும்மா இருக்கின்ற சங்கை ஊதிக் கெடுத்திட்டான் சேர் என்று நாங்கள் பல சந்தர்ப்பங்களிலே சொல்வது உண்டு. அமைதியாக இருக்கின்ற ஒரு விடயத்திலே அநாவசியமாகத் தலையிட்டு விவகாரத்தை உண்டு பண்ணி விடுகின்றார்கள் பாருங்கள்.

அவர்களுக்கு எல்லாம் இந்த உதாரணம் பொருந்தும். ஆனால் இந்த பழமொழி உண்டான விதம் எப்படி என்கின்றதைப் பற்றி ஒரு பெரியவர் சொன்னார். மகாபாரதத்திலேயிருந்து சில சம்பவங்களைச் சொன்னார். கிருஷ்ணன்– மேலே எப்போதும் ஐந்து பொருட்கள் இருக்கும். அது என்னவென்றால்?

சங்கு, சக்கரம், வில், வாள், கதை. இந்த ஐந்தும் கிருஷ்ணனிடம் இருக்கும். பக்தியோடு கிருஷ்ணனைப் பார்க்கின்றவர்களுக்கு இதெல்லாம் ஆபரணங்களாகத் தெரியும். எதிரிகளுக்கு இதெல்லாம் ஆயுதங்களாகவே தெரியும். சக்கரம், வில், வாள், கதை – இவையெல்லாம் ஆயுதங்கள் என்று சொன்னால் சரி ஒத்துக்கொள்ளலாம். சங்கு இருக்கே அது எப்படி ஆயுதம் ஆகும்? இப்படித் தான் துரியோதனன் நினைத்தான். ஏமாந்து போனான் என்பது அந்த பெரியவருடைய கருத்து. கண்ணனுடைய உதவி வேண்டும் என்பதற்காக அர்ஜுனனும் துவாரகைக்குப் போனான். துரியோதனனும் துவாரைக்குப் போனான். உங்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்கின்றார் கிருஷ்ணன்.

'செருவில் நீ எமக்கு வெம் போர் செய்

துணையாக வேண்டும்!' என்கிறார்கள்.

அதாவது வரப்போகின்ற போரிலே நீ எங்களுக்கு உதவியாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றார்கள். கிருஷ்ணன் என்ன சொல்லுகின்றார்?

தருமனுக்கு உதவி செய்வதாக முன்னரே வாக்குக் கொடுத்துவிட்டேன் என்கின்றார். துரியோதனன் பார்க்கின்றான். சரி அப்படி என்றால் நீங்கள் ஆயுதங்களைக்கொண்டு போர் செய்யக்கூடாது என்று வேண்டிக் கொண்டான். கிருஷ்ணன் யோசித்தார். சரி என்று ஒத்துக் கொண்டார். துரியோதனனுக்கு இதைக் கேட்டதும் ரொம்ப மகிழ்ச்சி. அர்ஜுனன் கிருஷ்ணனிடம் என்ன கேட்கின்றான்?

நீங்கள் எனக்கு சாரதியாக வேண்டும் என்று கேட்டுக்கொண்டான். சரி என்று ஒத்துக்கொண்டார் மகிழ்ச்சியோடு. ஏன் என்றால் தேர் ஓட்டுகின்ற சாரதிக்குத்தான் எஜமானுடைய வெற்றியை அறிவிக்கின்றதற்காக அடிக்கடி சங்கை ஊதுகின்ற உரிமை உண்டு. கிருஷ்ணனுடைய 'பாஞ்சஜன்யம்' என்கின்ற சங்குக்கு எவ்வளவு பலம் உண்டு என்கின்ற விடயம் துரியோதனனுக்குத் தெரியவில்லை.

சண்டை நடக்கின்ற போது தான் அதனுடைய சக்தி எப்படிப்பட்டது என்பதனை அவன் புரிந்து கொண்டான். போர் நடக்கின்ற சமயத்திலே கிருஷ்ணன் சங்கு ஊதிய போதெல்லாம் ஆயிரக்கணக்கான கௌரவ வீரர்கள் எப்படி மடிந்தார்கள் என்கின்றதனை நேரிலே பார்த்தான் துரியோதனன்.

அதற்குப்பிறகு தான் யோசித்தான் கிருஷ்ணனுடைய சங்கும் ஒரு ஆயுதம் ஆகிவிட்டது! அவன் சும்மா இருக்கின்ற சங்கை ஊதிக் கெடுக்கின்றானே! என்பதை உணர்ந்தான் துரியோதனன்.

இந்த அடிப்படையிலே உருவான பழமொழி தான் 'சும்மா இருக்கின்ற சங்கை ஊதிக்கெடுத்தான்' என்கின்றது. அந்த பழமொழியைத் தான் நாங்கள் இப்போது எப்படி எப்படியெல்லாம் உபயோகப்படுத்திக்கொண்டு இருக்கின்றோம். அது இருக்கட்டும். இப்போது நம்முடைய கதைக்கு வருவோம்.

ஒருத்தன் சொன்னான்...சேர் நட்புக்காக நான் எதையும் செய்வேன்.

நண்பனுக்கு ஒரு ஆபத்து என்றால் உடனடியாக எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்து விடுவேன். ஒருநாள் அப்படித்தான் நானும் என் நண்பனும் சினிமா பார்த்து விட்டு வயல் வெளி வழியாக நடந்து வந்து கொண்டு இருந்தோம். திடீர் என்று அவன் கால் தவறி ஒரு கிணற்றிலே விழுந்து விட்டான்.

உடனே நான் என்ன செய்தேன் தெரியுமா? ஒரே ஓட்டமாக ஓடிப்போய் மேலத்தெரு மணியை அழைத்துக் கொண்டு வந்து விட்டேன் என்று சொன்னான். ஏன் என்று கேட்டேன். அவன் தான் சேர் சவ ஊர்வலத்திலே சங்கு நன்றாக ஊதுவான் என்றான்.

# 40 வது அகவையில் இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

இலங்கையின் தொலைதூர கல்வியில் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் வகிபாகம் முதன்மையானதாகும். பல்கலைக்கழக கல்வியை தொடரவிருக்கும் அனைவரும் தமது உயர்கல்வி அபிலாசைகளை பூர்த்தி செய்யக்கூடியவகையில் உயர்தரம் மிகுந்த கல்வியை வழங்கக்கூடிய குறிக்கோள்களை தன்னகத்தே கொண்டதாக இலங்கை திறந்த பல்கலைக்கழகம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் படி, 1980ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22 ஆம் திகதி இலங்கை திறந்த பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டது. இன்று இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திற்கு 40 வயது. கடந்த நான்கு தசாப்தங்களாக இலங்கை மாணவர்களது உயர்கல்வியில் எதிர்பார்ப்புக்களையும் இலக்குகளையும் முழுமையாக நிறைவேற்றிவரும் உயர்கல்வி நிறுவனமாக இப்பல்கலைக்கழகம் திகழ்கிறது.

பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்நாட்டு விவகார அமைச்சினால் 13.03.1992 ஆம் திகதியில் வெளியிடப்பட்ட 16/92ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றுநிருபப்படி இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பெறப்படும் பட்டங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மேற்பார்வையின் கீழுள்ள ஏனைய பல்கலைக்கழகங்களினால் வழங்கப்படும் பட்டங்களிற்கு சமமானதாகும்.

எவ்வாறிருப்பினும், இப்பல்கலைக்கழகமானது வயது, முன்னைய தராதரங்கள், வருமானம் புவியியல் சார் மற்றும் தொழில்வாய்ப்புத் தடைகள் ஆகியவற்றை முதன்மைப்படுத்தாது, உயர்கல்விக்கான வாய்ப்புக்களை விரிவுபடுத்துவதற்கான திறந்த தொலைக் கல்வியிலான அதன் சார்புத் தன்மை காரணமாக, ஏனைய 14 தேசிய பல்கலைக்கழகங்களிலிருந்தும் வேறுபடுகின்றது.

திறந்த பல்கலைக்கழகம், முறையே கல்வி, பொறியியல் தொழில்நுட்பம், சுகாதார விஞ்ஞானம், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம், இயற்கை விஞ்ஞானம், முகாமைத்துவம் ஆகிய ஆறு பீடங்களையும், முப்பது கல்விசார் துறைகளையும் கொண்டுள்ளது. இது மரபுசார்ந்த 59 கற்கை நிகழ்ச்சித் திட்டங்களை 45000 இற்கும் மேற்பட்ட கற்கையாளர்களுக்கு வழங்குகின்றது.

மரபுவழி பல்கலைக்கழகங்களில் வழக்கில் உள்ள விதிமுறைகளுக்கமைய




கட்டாயமாக வருகை தருதல் மற்றும் பல்கலைக்கழகத்தில் தினசரி பிரசன்னமாதல் முதலான முறைமைகளை போன்றல்லாது தங்களின் வீடுகளிலிருந்த வண்ணமோ, வேலைத்தளங்களிலிருந்த வண்ணமோ குறிப்பிட்ட வருகைகளுடன் மாணவர்கள் தங்களுடைய கல்வியை தொடரக்கூடிய வகையில் இலங்கை திறந்த பல்கலைக்கழக கற்றல் முறை அமைந்துள்ளது.

திறந்த தொலைக் கல்வியூடாக **(Open Distance Learning)** கற்கை நெறிகளை வழங்குவதுடன் குறிப்பாக எந்திரவியல் விஞ்ஞானமாணி, இயற்கை விஞ்ஞானமாணி மற்றும் சுகாதார விஞ்ஞானமாணி போன்ற கற்கை நெறிகளை ஆய்வுகூடப்பயிற்சியுடன் கூடிய திறந்த தொலைக்கல்வியின் வழி வழங்குவதனூடாக இலங்கை திறந்த பல்கலைக்கழகமானது உலகளாவிய ரீதியில் சிறப்புப்பெற்று விளங்குகின்றது.

இலங்கை திறந்த பல்கலைக்கழகம், தொழிலில் ஈடுபடும்வயது வந்தோருக்கும், மரபு வழிசார்ந்த பல்கலைக்கழகங்களுள் நுழைவதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கப்பெறாதவர்களின் கல்விக்கான மாற்று வழிகளை வழங்கி உயர்கல்வித் துறைக்குள் பிரவேசிப்பதற்கு வழிவகைகளைச் செய்துள்ளது. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் மாணவர் அனுமதிக் கொள்கையானது பின்வரும் நபர்களை தங்களின் விருப்புத் தேர்வுத் துறையில் மூன்றாம் நிலைக் கல்வியைப் பெற்றுக்கொள்ள ஊக்குவிக்கின்றது.

- நிதிசார் காரணங்கள், குடும்பப் பொறுப்புகள் அல்லது போட்டித்தன்மை, குறித்த வெட்டுப்புள்ளிகளை அடைவதற்கு இயலாமை போன்ற காரணங்களினால் மரபுரீதியான பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற முடியாத க.பொ.த (உ/த) பூர்த்தி செய்தோர்.
- தொடர்ந்து தொழில்சார் அபிவிருத்தியை அடைய விரும்பும் தொழில் புரிவோர்.
- ஏனைய காரணங்களுக்காக அறிவைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர்.

வருடம் முழுவதும் கல்விசார் செயற்பாடுகளுக்கான பல்கலைக்கழகத்தின் வெளிப்படைத் தன்மை, தொழில் புரிவோருக்கு கவர்ச்சிகரமான தெரிவொன்றை ஆக்குகின்றது. அதனால் இலங்கை திறந்த பல்கலைக்கழக மாணவர்களில் ஏறக்குறைய 65 சதவீதமானோர் தம் தொழிலை சிறப்பாக தொடர்கின்றனர்.

அவர்கள் தங்களின் கல்வியை மேம்படுத்தவும், அவர்களின் கல்வி ரீதியான மற்றும் தொழில் அபிவிருத்தி குறிக்கோள்களை அடைந்து, தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யக்கூடிய பொறுப்புமிக்க பிரஜைகளாகுவதற்கான வாய்ப்புக்களும் அவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

பல்கலைக்கழகமானது நாட்டின் வெவ்வேறு பாகங்களிலும் உள்ள 09 பிராந்திய நிலையங்கள் மற்றும் 19 கற்கை நிலையங்களின் வலையமைப்பொன்றின் ஊடாக தனது சேவைகளை வழங்கிவருவதுடன், கல்வியை உரிய வகையில் மாணவர்களுக்கு அருகில் கொண்டு வந்துள்ளது.

இந்த நிலையங்களின் வலையமைப்பானது ஆற்றுப்படுத்தல், விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளல், மாணவர்களை சேர்த்தல், கற்கை நெறி சாதனங்கள் விநியோகம் மற்றும் நாட்பாடசாலைகள், பரீட்சைகள் அடங்கலான திசைமுகப்படுத்தல் அமர்வுகள், முகாமைத்துவ செயன்முறைகள் ஆகியவற்றுக்கான வசதிகளை வழங்குகின்றது. இப்பல்கலைக்கழகம் குறிப்பாக வடமாகாணத்தில் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்துடன் கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய கற்கை நிலையங்கள் அமையப்பெற்றிருப்பது எமது பிரதேசத்தின் உயர்கல்விக்கான ஒரு வரப்பிரசாதமாகும்.

**கி.கந்தவேள்**
**இலங்கை திறந்த பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்**

# வலையில் சிக்கி உயிரிழந்த சிறுத்தை



(கொழும்பு)

சிறுத்தை ஒன்று வலையில் சிக்கி உயிரிழந்த மற்றுமொரு சம்பவம் நாவலப்பிட்டியில் இடம்பெற்றுள்ளது.

நாவலப்பிட்டி - மாபாகந்த பகுதியில் இந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

7அகவையைக் கொண்ட பெண் சிறுத்தையே வலையில் சிக்கி உயிரிழந்துள்ளது.

மரம் ஒன்றில் இணைக்கப்பட்டிருந்த வலையில் சிக்கிய சிறுத்தை உயிரிழந்த நிலையிலேயே மீட்கப்பட்டதாக வனவிலங்கு திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் நாவலப்பிட்டிய நீதிமன்றில் முறையிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே நல்லதண்ணி, புசல்லாவ, நெலுவ, கிளிநொச்சி, உடவளவை பூங்கா ஆகிய பகுதிகளில் சிறுத்தைகள் வலைகளில் சிக்கி உயிரிடனும், உயிரிழந்தும் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# சுகாதாரப் பரிசோதகர்கள் விலகல்; நாட்டின் நிலைமை மோசமாகும்

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அதிருப்தி

(கொழும்பு)

**தமது தொழில் கோரிக்கையின் அடிப்படையில் கொரோனா ஒழிப்பு பணிகளில் இருந்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் விலகியுள்ளதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் இதனால் நாட்டு நிலைமை மோசமாகும் என்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தொகுப்பாளர் மருத்துவர் ஹரித அளுத்கே எச்சரித்தார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் பல தொழிற்சங்கங்களுக்கு தமது தொழில் சம்பந்தமாக நிறைவேற்றப்பட வேண்டிய பல கோரிக்கைகள் உள்ளன.

எனினும் இது கோரிக்கைகளை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பமல்ல என்பது அனைவருக்கும்தெரியும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும் என வலியுறுத்தியதுடன் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உறுப்பினர்களுக்கு மேலதிக கொடுப்பனவுகளை வழங்காமை, கஷ்ட பிரதேசங்களுக்கான கொடுப்பனவுகள் வழங்காமை, இடமாற்றங்களை நடைமுறைப்படுத்தாமை உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமான கோரிக்கைகள் உள்ளன. இவற்றை பெற்றுக்கொள்ள தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட வேண்டும் என அவர் சுட்டிக்காட்டினார். (ஐ-4)



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

28

**கலாநிதி முருகர் குணசிங்கம்**

அனைத்து அகதி முகாம்களும் ஒரே தன்மையான அமைப்புகள் கொண்டவை. ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் கம்பி வேலிகளும் சில இடங்களில் சீமெந்தினால் கட்டப்பட்ட வேலிகளும் கதவுகளும் உள்ளன.

பொலிஸாரின் கண்காணிப்பும் அரசு அலுவலர் கண்காணிப்பும் உண்டு. இரு அதிகாரிகளிடமும் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

அகதிகள் காலை 8 மணிக்கு வெளியில் சென்று இரவு 8 மணிக்குள் மீண்டும் முகாமிற்குள் வந்து சேர வேண்டும். வாரத்தில் ஒரு நாள் முகாமில் உள்ள அனைவரையும் சோதனையிடுவதும் வழக்கமான நிகழ்வு ஆகும்.

ஒரு சிறிய படுக்கை அறையும் மற்றொரு சிறிய அறையும் உள்ளன. அந்த அறைதான் சமையல் அறையாகவும் தங்கும் அறையாகவும் இருக்கின்றது.

வீடுகளின் மேற்கூரை சில இடங்களில் தகரம், பல இடங்களில் அஸ்பெஸ்டாஸ் **(asbestos)** தகடுகள் மற்றும் ஓலைகளால் வேயப்பட்டு இருக்கின்றது.

மின்சாரம், சுகாதார வசதிகள் போதுமான அளவில் இல்லை. சுமார் பத்துப் பதினைந்து குடும்பங்களுக்கு ஒரு பொதுக்கிணறு உள்ளது.

அதே அளவு குடும்பங்களுக்கு ஒரேயொரு மலசலகூடம் உள்ளது. வீடுகள் மிகவும் நெருக்கமாக உள்ளன. சிறிய குடும்பமோ பெரிய குடும்பமோ அந்தச் சிறிய குடிசைக்குள் தான் வாழ வேண்டும்.

தமிழ்நாட்டில் கோடை காலங்களில் சுட்டு எரிக்கின்ற 110 பாகை வெயில் தகர, அஸ்பெஸ்ரஸ் கூரைகளால் வேயப்பட்ட வீடுகளில் உள்ள அகதி மக்களைக் கொடூரமாக வாட்டி வதைக்கின்றது.

"அனலிடைப்பட்ட புழுக்கள்" போல் அவர்கள் துடித்துத் துடித்துச் செத்துக் கொண்டு இருக்கின்ற சூழ்நிலையே அங்கு காணப்படுகின்றது.

தமது சொந்த நாட்டில் சொந்த வீட்டில் சுகமாக வாழ்ந்த மக்கள் அகதி முகாம்களில் வதைபட்டுக் கொண்டு இருக்கின்றார்கள்.

ஏற்கனவே பல்வேறுபட்ட பாரிய அதிர்ச்சிக்கும் மன உளைச்சலுக்கும் உள்ளான அந்த மக்களுக்கு இத்தகைய வாழ்க்கைச் சூழல் மேலும் எவ்வளவு வேதனைகளையும் மன உளைச்சலையும் மன அழுத்தத்தையும் கொடுத்து இருக்கும் என்பதனை மனிதாபிமன அடிப்படையிலும் சமூகவியல் நோக்கிலும் உளவியல் நோக்கிலும் சிந்திக்கும்போது அந்த மக்கள் இந்திய அரசினாலும் தமிழ்நாட்டு அரசினாலும் ஏன் உலகத்தினாலும் கைவிடப்பட்டவர்களாகவே கருத வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தின் **(UNHCR)** அறிக்கைகளைப் பார்வையிட்டபோது அகதி முகாம்களில் வசதிகள் சீரமைக்கப்பட வேண்டும் என்று தமிழ்நாட்டு அரசுக்குப் பல தடவைகள் அறிவுறுத்தி இருப்பது தெரிய வந்தது.

ஆனால் இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் இலட்சக்கணக்கான மக்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்கின்ற நிலைமையில் வாழ்வதற்குச் சிறு கொட்டில்களும் இல்லாத மக்களுக்கு நடுவே அகதி முகாம்களில் உள்ள அடிப்படை வசதிகள் போதுமானது என்றே இந்திய அரசும் தமிழ்நாடு அரசும் திருப்திப்படுவதாகக் கருத முடிகிறது.

சுருங்கக் கூறின் ஈழத்தமிழர்கள் அரசியல் வறுமையுள்ள ஒரு நாட்டில் இருந்து பொருளாதார வறுமையுள்ள ஒரு நாட்டிற்குள் அகதிகளாக வந்து இருக்கின்றார்கள்.

மனித உயிருக்கு எதுவிதப் பாதுகாப்பும் இல்லாத ஒரு நாட்டில் இருந்து உயிருக்குப் பாதுகாப்பு வழங்குகின்ற ஒரு ஜனநாயக நாட்டுக்கு வந்து இருக்கின்றார்கள் என்றே கொள்ள வேண்டும்.




ஈழத்தமிழ் அகதிகளின் அன்றாட வாழ்வு மிகவும் ஆச்சரியமாகவே காணப்படுகிறது. இந்திய அரசும் மாநில அரசும் கொடுக்கின்ற பல உதவிகள் உயிரைப் பிடித்து வைக்கவே போதுமானதாக உள்ளதாகப் பல அகதிகள் கூறுகின்றனர்.

ஒரு குடும்பத் தலைவனுக்கு அல்லது குடும்பத் தலைவிக்கு மாதம் 1000 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படுகிறது. (சுமார் 20 அமெரிக்க டொலர்கள்). குடும்பத்தில் 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் இருந்தால் அவருக்கு 750 ரூபாய்களும் 18 வயதிற்குக் குறைந்தவர்களுக்கு மாதம் 400 ரூபாய்களும் மாதாந்தக் கொடுப்பனவாக அரசினால் வழங்கப்படுகின்றது.

மேலும் ஒரு குடும்பத்திற்கு 20 கிலோ அரிசி இலவசமாகவும் ஓர் ஆளுக்கு 12 கிலோ அரிசி மானிய விலையிலும் வழங்கப்படுகின்றது.

ஒரு குடும்பத்திற்கு ஒரு மாதத்திற்கு சீனி 1/2 கிலோ, பருப்பு ஒரு கிலோ, மண்ணெண்ணெய் 5 லீற்றரும் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. இவ்வகையில் ஆண்டுக்கு 140 கோடி ரூபாய் ஈழத்தமிழ் அகதிகளுக்குச் செலவு செய்தாகக் கூறப்படுகின்றது.

அகதிகளின் ஏனைய செலவுகளான உடைகள், குளியல் அறைப் பொருட்கள், சமையல் பொருட்கள் எல்லாம் அவர்களுக்கு வழங்கும் மேற்படி உதவித் தொகையில் இருந்தே வெளிக்கடைகளில் வாங்கியாக வேண்டும்.

இதனால் மிகக் குறைந்த சம்பளத்தில் வெளியில் வேலைக்குப் போய் உழைத்து மாதம் சுமார் 2000 ரூபாய் வரையிலும் ஈட்டி தமது அன்றாடக் குடும்பச் செலவுகளைச் சமாளிக்கின்றனர்.

சில தமிழ் அமைப்புகளும் கிறிஸ்தவ அமைப்புகளும் அகதிகளின் அவலங்களைத் துடைப்பதில் அக்கறை கொண்டுள்ளமை அந்த மக்களுக்கு ஓரளவு ஆறுதலையும் நம்பிக்கையையும் தருகிறது.

இந்திய அரசும் தமிழ்நாடு அரசும் ஏற்கனவே குறிப்பிடப்பட்ட கொடுப்பனவுகள், உதவிகளை விட மேலதிகமாக அந்த மக்களின் அவலங்களைப் போக்கவும் அவர்கள் வாழ்க்கையைச் சீர்ப்படுத்தவும் எவ்வாறான சேவைகளைச் செய்கின்றன என்பதனை முதலில் காண்போம்.

தமிழ்நாடு அரசு அகதிகளுக்கும் இலவச மருத்துவச் சேவை வழங்கி வருகிறது. அதன்படி அரசு வைத்தியசாலைகளில் மருத்துவ ஆலோசனைகள், மருத்துவச் சேவைகள், மருந்துகள் அனைத்தையும் அகதிகள் இலவசமாகப் பெற முடியும்.

இவற்றையெல்லாம் தனியார் வைத்தியசாலைகளில் பெறுவதைப் பற்றிக் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாது. பல்லாயிரக்கணக்கில் பணம் தேவைப்படும்.

அத்துடன் ஈழத்தமிழ் அகதிகளின் பிள்ளைகளுக்குத் தமிழ்நாடு அரசுப் பள்ளிகளில் இலவசமாகக் கல்வி பயில வசதி அளிக்கப்பட்டு உள்ளது.

ஆரம்ப வகுப்பில் இருந்து பல்கலைக் கழகக் கல்வி வரை இலவசக் கல்வி வழங்கப்படுகிறது. எனவே ஈழத்தமிழர்களின் பிள்ளைகள் எவ்விதத் தடையும் இன்றிக் கல்வியைத் தொடர முடிகின்றது.

ஆனால் அதிக செலவாகும் கற்கை நெறிகளையும் அதிகமாக எல்லோராலும் விரும்பிக் கற்கப்படும் மருத்துவக் கல்வி போன்றவற்றிற்கும் **(High Demand Courses)** அனுமதிகள் எடுப்பது மிகவும் சிரமமான விடயம் ஆகும். அவ்வாறான கற்கை நெறிகளுக்கு அனுமதி வழங்கப்படுவது இல்லை என்றே கூறலாம்.

அரசு தவிர சில தனியார் தமிழ் அமைப்புகளும் ஈழத்தமிழ் அகதிகளுக்குத் தொடர்ச்சியாகக் கல்விச்சேவை செய்து வருவதையும் இங்கு குறிப்பிடாக வேண்டும்.

எடுத்துக்காட்டாக சென்னையில் இயங்கும் ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம் **(OFERR - Organisation for Eelam Refugees' Rehabilitation)** கடந்த இருபத்தியெட்டு ஆண்டுகளாக இயன்ற அளவு தொண்டு ஆற்றி வருகின்றது.

இந்நிறுவனத்திற்கு இந்திய அரசின் நன்கொடைகளும் பிறநாடுகளில் உள்ள கிறிஸ்தவ நிறுவனங்கள், மனித உரிமை நிறுவனங்கள், அரசு சார்பு அற்ற நிறுவனங்கள், தனியார்களின் நிதி உதவிகளும் கிடைப்பதாக அறிய முடிகிறது.

சென்னையில் ஒரு வசதியற்ற கட்டடத்தில் இந்த நிறுவனம் அமைந்து இருக்கின்றது. இதன் தலைவராக செல்வநாயகம் சந்திரகாசன் என்பவர் தொடக்கத்தில் இருந்து இன்றுவரையிலும் பொறுப்பு வகித்து வருகின்றார்.

அங்கே சுமார் நூற்றுக்கும் மேலான ஈழத்தமிழர்கள் பல்வேறுபட்ட செயற்பாடுகளில் ஈடுபட்டு இருக்கின்றார்கள். இவர்களுள் சிலர் இலவசமாகவும் பலர் சிறுதொகை ஊதியத்திலும் வேலை செய்கின்றார்கள்.

இந்நிறுவனம் நன்கொடையாகக் கிடைக்கும் வருமானத்தில் இருந்து நிர்வாகச் செலவுகளையும் ஊழியர்களுக்கு ஊதியத்தையும் வழங்கி வருகின்றது.

பல்வேறுபட்ட மருத்துவ ஆலோசனைகள், மருத்துவ வசதிகளையும் ஈழத்தமிழ் அகதிகளுக்குச் செய்து வருகிறது. மாணவர்களுக்குப் பாடப்புத்தகம் இலவசமாக வழங்குதல், புலமைப்பரிசில்கள் வழங்குதல், மிகமிக வறுமைப்பட்ட பிள்ளைகளுக்குச் சிறு நிதி உதவிகள், உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்குத் தொழிற் பயிற்சித் திட்டங்கள், பட்டறைகள் போன்றவற்றை இலவசமாக நடத்தி அவர்கள் இந்தியாவிலும் இலங்கையிலும் தொழில் புரிவதற்கான திறமைகளை வளர்ப்பதிலும் அக்கறை காட்டி வருகிறது.

(தொடரும்)

# புலனாய்வாளர்களின் கிடுக்குப் பிடியிலிருந்து வடக்கு - கிழக்கு விடுபட வேண்டும்

## சிவசக்தி ஆனந்தன் காட்டம்

(நெளுக்குளம்)

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் இணைந்து கூட்டமைப்பு செய்யத் தவறிய விடயத்தை முன்னெடுத்துச் செல்ல விரும்புகிறோம் என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பொதுச் செயலாளரும் முன்னாள் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

கடந்த கால தேர்தல்கள் போல் அல்லாது இம்முறை தேர்தலில் தமிழ்க் கட்சிகள் தீர்வுடன் அபிவிருத்தி குறித்த விடயத்தை மக்கள் முன் வைப்பதற்கான பின்னணி என்ன? எனக் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே சிவசக்தி ஆனந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் உரிமையும் அதிகாரமும் இல்லாமல் அபிவிருத்தியினை முன்னெடுக்க முடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது இராஜதந்திர தோல்வியை மூடிமறைப்பதற்காக தற்பொழுது அரசியல் தீர்விற்கு எத்தனைகாலம் எடுக்கும் என்பது தெரியாது. அதுவரையில் எமது பிரதேசத்தின் அபிவிருத்தியைப் பிற்போட முடியாது என்ற முழக்கத்தை முன்வைத்து மக்களை திசை திருப்பும் நோக்கில் அரசியல் தீர்வுக்கும் அபிவிருத்திக்கும் ஆணை தாருங்கள் என்று இத்தேர்தல் பரப்புரைகளில் கூறி வருகின்றது.

ஆனால் நல்லாட்சி அரசாங்கத்திற்கு முண்டுகொடுக்கும் போதும் அவ் அரசாங்கத்தின் பாதுகாப்பு செலவிற்கு இரட்டிப்பு தொகை ஒதுக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்திற்கும் கையுயர்த்தி ஆதரவு தெரிவித்த போதும் ஏன் அபிவிருத்தி குறித்து பேசவில்லை.

நாம் ஒன்றைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். தென்னிலங்கையில் ஆட்சியில் இருப்பவர்களிடம் அரசியல் உரிமையும் இருக்கின்றது. ஆட்சி அதிகாரமும் அவர்களது கைகளிலேயே இருக்கின்றது. இந்தநாடு சுதந்திரம் அடைந்ததன் பின்னர் அப்பகுதிகளில் எத்தகைய அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

தமிழ்மக்களுக்கு எதிராக சிங்கள மக்களை முன்னிறுத்தியே அவர்கள் அரசியல் செய்கின்றனர். ஆக, அவர்களிடமே அபிவிருத்தி குறித்து எத்தகைய திட்டமும் இல்லை. வேலையின்றி இருக்கும் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களை திசைதிருப்புவதற்காகவும் தமது கையாலாகாத்தனத்தை மூடிமறைப்பதற்காகவும் நிலைபேறான அபிவிருத்திகளை மேற்கொண்டு விட்டால் சிலரது தனிப்பட்ட வருமானம் நின்றுவிடும் என்பதற்காகவுமே தென்னிலங்கை அரசியல் சமூகம் நிலைபேறான அபிவிருத்திகளில் அக்கறையின்றி, நாட்டுமக்களை தொடர்ந்தும் அந்நிய நாடுகளின் வளங்களில் தங்கி நிற்க வைக்கின்றது. இதற்கு தமிழர் விரோதச் செயற்பாடு அதற்கு பக்க துணையாக இருக்கின்றது.

எமது பகுதிகளில் எத்தகைய அபிவிருத்திகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை நாமே தீர்மானிக்க வேண்டும். அதற்கு எமக்கு உரித்துடைய உரிமைகளை மீட்டெடுக்க வேண்டும்.



உரிமையைப் பெற்றுவிட்டால் அபிவிருத்தியை நாமே மேற்கொள்வோம் என்று ஒவ்வொரு தேர்தல் மேடைகளிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முழங்கிவந்தனர்.

யுத்தம் முடிவடைந்து பதினொரு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும், எமது பிரதேசத்து மக்கள் பாரிய இராணுவ, புலனாய்வுப் பிரிவினரின் அச்சுறுத்தலுக்கும் கண்காணிப்புக்கும் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையில், புதிதாக ஆயுதங்களைக் கண்டுபிடிப் பதாகக்கூறி எம்மைத் தொடர்ந்தும் தங்களது கிடுக்கிப் பிடியின்கீழ் வைத்திருக்கும் சூழலில் இதிலிருந்து விடுபடுவதே எமது முதலாவது பணியாக இருக்க வேண்டும்.

இன்றைய கொரோனா அச்சுறுத்தல் சூழ்நிலையிலும் கொரோனா தாக்கம் இல்லாத எமது வடக்கு-கிழக்கே இராணுவத்தின் தீவிர கண்காணிப் பின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. மக்கள் நடமாடுவதற்கே அஞ்சுகின்ற சூழல் நிலவுகின்றது. இவை அனைத்தும் எமது உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளமையை முன்பைவிடத் துல்லியமாக எடுத்துக்காட்டுகின்றன.

அத்துடன் எமக்கான அதிகாரப்பகிர்வை வழங்கவே முடியாது என்று இன்றைய ஆட்சியாளர்கள் கூறுவதிலிருந்து எமக்கு உரித்துடைய அரசியல் உரிமையைத் தாங்கள் பறித்து வைத்திருக்கிறோம் என்பதும் தெளிவாகின்றது.


இதுவரை காலமும் கூட்டமைப்பை ஒரு கட்டமைப்பாக உருவாக்குவதற்காகவும் மக்களின் அபிலாசைகளை மக்களின் பங்களிப்புடன் முன்னெடுப்பதற்காகப் போராடிய நாம், அந்த முயற்சி பலனளிக்காமையால் இன்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் இணைந்து கூட்டமைப்பு செய்யத் தவறிய விடயத்தை முன்னெடுத்துச் செல்ல விரும்புகிறோம் என அவர் தெரிவித்தார்.(ஐ-2-299)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தோற்கடிக்கப்படுவதன் மூலம் அரசாங்கத்திற்கும் உலகத்திற்கும் பாடம் சொல்ல வேண்டும்

## பசுமை இயக்க தலைவர் பொ.ஐங்கரநேசன் கூறுகிறார்

(முறிகண்டி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தோற்கடிக்கப்படுவதன் மூலம் அரசாங்கத்திற்கும் உலகத்திற்கும் பாடம் சொல்ல வேண்டும் என பசுமை இயக்கத் தலைவரும் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் சுயேட்சைக் குழுவாக போட்டியிடும் முன்னாள் வடக்கு மாகாண விவசாய அமைச்சருமான பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.



கிளிநொச்சியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வேட்பாளர் அறிமுக நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாங்கள் நம்பி வாக்களித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எங்களுக்கு ஏதாவது தீர்வை பெற்றுத்தருவார்கள், மக்களிற்கு விடிவிற்கு வழி காட்டுவார்கள் என்று எதிர்பார்த்த நிலையில் சிங்கள பேரினவாதக் கட்சிகளுடன் கலக்கும் வகையில் எம்மையும் அழைத்து சென்றுள்ளனர். பௌத்த விகாரைகள் முளைக்கின்றபோது குரலெழுப்பாது தேர்தல் நேரத்தில் குரலெழுப்புகின்ற இவர்கள், பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சியாக இருந்தாலும் சரி, நல்லாட்சி என்று கூறப்பட்ட காலத்தில்தான் பௌத்தத்திற்கு முதலிடம், பௌத்தம்தான் முதல் மதம் என்று இலங்கை அரசாங்கம் அறிவித்தது. இவர்களால் அதற்கு எதிராக குரல் எழுப்ப முடியவில்லை.

எமது போராட்டம் அகிம்சை ரீதியாக தந்தை செல்வாவினால் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் அது மேலும் தொடர முடியாத காரணத்தினால்தான் ஆயுதப் போராட்டமாக வடிவமைக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீண்டும் வாக்கு வேட்டைக்காக தமது கூட்டமைப்பை விடுதலைப்புலிகள் தான் உருவாக்கினார்கள் என்று சொல்கின்றார்கள்.

உருவாக்கியதை சொல்லும் அவர்கள், உருவாக்கப்பட்டதன் காரணத்தை அடியோடு மறந்துவிட்டார்கள். யுத்தத்திற்கு பின்னர் ஜனநாயகப் போராட்டத்தை முன்னெடுத்திருக்க வேண்டிய இவர்கள், விடுதலைப் போராட்டத்தினால் கொண்டுவந்து விடப்பட்ட பகுதிக்கு மேலும் பின்னால் சென்று செல்வநாயகம் ஆரம்பித்த இடத்திலிருந்து ஓடுவதற்கு முயற்சிக்கின்றார்கள்.

ராஜபக்ஷ அரசாங்கம் முடிவடைந்து மைத்திரி-ரணில் தலைமையிலான அரசாங்கம் ஒன்று மலர்ந்தபோது அதற்கு நல்லாட்சி அரசாங்கம் எனப் பெயர் சூட்டி அந்த அரசாங்கத்திற்கு முண்டு கொடுத்தவர்கள் இவர்கள்.

மைத்திரி-ரணில் இடையில் பிரச்சினைகள் தோன்றி மீண்டும் மகிந்த ராஜபக்ஷ பாராளுமன்றத்தின் உயர் நிலைக்கு வருகின்ற போது, அவர்கள் இருவரையும் காப்பாற்றுவதற்காக வாதிட்டவர்கள் இவர்கள். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இனத்தினுடைய நலனை பேசவேண்டிய இவர்கள் அதனை செய்யவில்லை. வாக்கு வங்கியை நினைவில் கொண்டு மாத்திரமே இவர்கள் பேரம் பேசினார்கள்.

கிளிநொச்சி மண்ணிற்கு மைத்திரிபால சிறிசேன வந்த பொழுது அப்பாவை விடுங்கள் என்று கதறி அழுத அந்த குழந்தைக்காகக்கூட ஓர் நிபந்தனையை வைத்து அரசியல் கைதிகளை விடுவித் திருக்கலாம். மாதங்கள், ஆண்டுகள் கடந்து காணாமல் போனவர்களின் உறவுகளது கண்ணீர் போராட்டம் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. இவர்களிற்கான குறைந்தபட்ச பதிலைத்தன்னும் அரசாங்கத்திடமிருந்து பெற்றுத் தந்திருக்கலாம்.

ஆயுதப் போராட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்லுகின்ற இந்தக் கட்சியினர் எவ்வாறு ஆயுத போராட்டத்தின்போது கைதான அரசியல் கைதிகளின் விடுதலை பற்றி சிந்திப்பார்கள்? இந்த ஆயுதப் போராட்டம் இடம்பெற்றபோது காணாமல் போனவர்கள் தொடர்பான தீர்விற்கு எவ்வாறு முயற்சிப்பார்கள்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு கொடுத்த காலம் காலாவதியாகிவிட்டது. இந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தோற்கடிக்கப்பட வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்ப தோற்கடிக்கப்படுவதன் மூலம் நாங்கள் அரசாங்கத்திற்கும் உலகத்திற்கும் பாடம் சொல்ல வேண்டும். மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை தாருங்கள்.

ஐக்கிய நாடுகளுடன் பேசுவோம் எனவும், உலக நாடுகளுடன் பேசுவோம் எனவும் ராஜதந்திர அரசியலை முன்னெடுப்போம் எனவும் அவர்கள் சொல்லுகின்றார்கள். இனியும் இவர்களிற்கான காலஅவகாசம் கொடுத்தால் பல்வேறான சவால்களிற்கு நாங்கள் மீண்டும் முகம் கொடுக்க வேண்டும் எனவும் அவர் தனதுரையில் மேலும் தெரிவித்தார். (ஐ-2-100)

# 29 வேட்பாளர்களுக்கு எதிராக முறைப்பாடுகள்; ஐவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

(கொழும்பு)
எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில், 29 பேருக்கு எதிராக தேர்தல் விதிமுறை, சட்டமீறல் தொடர்பில் முறைப்பாடுகள் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்றுள்ளதாக தேர்தல்கள் கடமைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

## மூவர் கைது

இந்த 29 பேரில் 3 வேட்பாளர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், குருநாகல், புத்தளம் மாவட்டங்களைச் சேர்ந்த வேட்பாளர்கள் மூவரே இவ்வாறு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளவர்களாவர்.

இதேவேளை தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் இரு பொலிஸ் பொறுப்பதிகாரிகள் உள்ளிட்ட 5 பொலிஸாருக்கு எதிராகவும் ஒழுக்காற்று நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. ஜாஎல, பொலநறுவை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளே தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள பொறுப்பதிகாரிகளாவர். அவர்கள் குறித்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பதவியில் இருந்து நீக்கப்பட்டு வேறு இடங்களில் சாதாரண கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதனைவிட நடவடிக்கை எடுக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களில் அமைச்சரவை பாதுகாப்பு பிரிவின் அதிகாரி ஒருவரும் உள்ளடங்குகின்றார். (ஐ-4)

# கடித உறையில் போதைப் பொருள் விநியோகம்

(அம்பாறை)
கொரியர் சேவை ஊடாக கடித உறையில் போதைப் பொருட்களை கடத்தியவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களை கைது செய்ய தேடுதல் நடவடிக்கை ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக அம்பாறை மாவட்ட மதுவரி அத்தியட்சகர் என்.சுதாகரன் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை தனியார் கொரியர் சேவை ஊடாக ஹெரோயின் போதைப்பொருள் கடித உறைகளில் கடத்தப்பட்டு வருவதாக கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய அம்பாறை புறநகர்ப் பகுதி ஒன்றில் மதுவரி அத்தியட்சகர் மற்றும் அம்பாறை மதுவரி நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் 4 சந்தேக நபர்களை போதைப்பொருளுடன் கைது செய்திருந்தனர்.

கைதான நால்வருடன் கஞ்சாவினை தம்வசம் வைத்திருந்ததாக தெரிவிக்கப்பட்ட மற்றுமொரு 43 வயது மதிக்கத்தக்க சந்தேக நபரையும் கடந்த புதன் கிழமை அம்பாறை நீதிமன்ற நீதவான் ஹன்சதேவ சாமர திவாகர முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 29 ஆம் திகதி வரை சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

இதற்கமைய அம்பாறை மாவட்டத்தின் மதுவரி அத்தியட்சகர் தலைமையில் கைதானவர்கள் தொடர்பிலான புலனாய்வு முடக்கிவிடப்பட்டிருந்தது.

இதனையடுத்து தனியார் கொரியர் சேவை ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்த இந்த நூதனமான கடத்தல் நடவடிக்கையுடன் தொடர்புடையதாக நம்பப்படும் அம்பாறை கிளையின் சந்தேக நபரான அதன் முகாமையாளர் மற்றும் விநியோகஸ்தர் என இருவர் கைதாகி இருந்தனர்.

அவர்கள் வழங்கிய வாக்கு மூலத்திற்கமைய இச் சேவையின் கொழும்பு பிரதான நிலைய அதிகாரிகளும் எதிர்வரும் நாட்களில் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மதுவரி அத்தியட்சகர் குறிப்பிட்டார்.

அத்துடன் குறித்த தனியார் கொரியர் சேவை ஊடாக கடத்தப்படும் போதைப்பொருட்களை பொறுப்பேற்று பெற வந்தவர்கள் என சந்தேகத்தின் பெயரில் இருவரும் கைதாகியுள்ளனர்.

இந்த நிலையில் சம்பவத்துடன் தொடர்புபட்டவர்களை நீதிமன்ற உதவியுடன் பிடியாணை மூலம் கைது செய்ய முயற்சிகளை மேற்கொண்டு இருக்கின்றோம் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# 100 சாரதிகள் கைது
## வாகனங்கள் கைப்பற்றல்

(கொழும்பு)
மது போதையில் வாகனம் செலுத்திய 100 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினமிரவு 9 மணிமுதல் நேற்று அதிகாலை 4 மணிவரை மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் 100 வாகனங்களும் பொலிஸாரால் கையகப்படுத்தப்பட்டுள்ளதாக மேல் மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம் தெரிவித்துள்ளது. இதேவேளை பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள 90 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என அந்த அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது. (ஐ-4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2073

**யாதவ்**

இவன் என்ன நினைப்பான்
அவன் என்ன நினைப்பான்னு
நினைத்தே வாழ்றோம்



ஆனால் உண்மையில் ஒருத்தனும்
நம்மளைப் பற்றிநினைக்கிறதே இல்லை...

**கிருசாந்**



அமைதியாக
இருப்பவனை
முட்டாள் என்று
எண்ணி விடாதே...

பேசுபவனை விட
கேட்பவனே
புத்திசாலி!

**யுகேஷ்**

நீ தேடிச் சென்றாலும்
விலகிச் செல்வது மற்றவர்கள்...



நீ விலகிச் சென்றாலும்
உன்னைத் தேடி வருவது பெற்றவர்கள்...

**கருணி**

நோயாளி-டாக்டர் இடது கால்
முட்டி மிகவும் வலிக்குது
டாக்டர்- வயசாகிடுதல்லே அது தான்.

நோயாளி- வலது காலுக்கும்
அதே வயது தான் ஆகுது.
ஆனால் அது வலிக்கலையே!

டாக்டர்-???

**காயேஸ்**

மற்றவருக்கு ஆறுதல்
சொல்லும்போது
இருக்கும் தைரியம்



தனக்கு தேவைப்படும்போது
இருப்பதில்லை...

**திவாகரி**

உயர்ந்த
எண்ணங்களே
உயர்வான
பாதைக்கு
வித்திடுகிறது



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மேலதிக வகுப்புகளை நடத்திய ஆசிரியருக்கு கொரோனா

## மாணவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்

(கம்பஹா)

கம்பஹாவில் பாடசாலை மாணவர்களுக்கு மேலதிக வகுப்பு நடத்திய ஆசிரியருக்கு கொரோனோ தொற்று உறுதியாகியுள்ளதாக கம்பஹா சுகாதார வைத்திய அதிகாரி சுபாஸ் சுபசிங்க தெரிவித்தார்.

இதனையடுத்து, குறித்த மாணவர்களை அடையாளங் கண்டு தனிமைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வைத்தியர் மேலும் தெரிவித்துள்ளார்.

கம்பஹா சுகாதார அத்தியட்சகர் அலுவலகம் மூலம் கொரோனா தொற்றுக்கு உள்ளான நபருடன் நெருங்கிசெயற்பட்ட 101 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில் குறித்த ஆசிரியருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளதாக கம்பஹா சுகாதார வைத்திய அதிகாரி சுபாஸ் சுபசிங்க தெரிவித்துள்ளார்.

கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலைய பாடசாலை ஆலோசகரான இவர், கம்பஹாவில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு மேலதிக வகுப்பு நடத்தியுள்ள நிலையில், குறித்த மாணவர்களை அடையாளங் கண்டு தனிமைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஜ-4)



# ஆன்மீகம்

## படுக்கை மீது பாசம் ஏன்?



**தூமணி மாடத்துச் சுற்றும்<br>விளக்கெரிய<br>தூபம் கமழத் துயிலணைமேல்<br>கண்வளரும்<br>மாமன் மகளே! மணிக்கதவம்<br>தாள்திறவாய்!'**

என்று திருப்பாவை ஆண்டாள் திரும்பத் திரும்பக் குரல் கொடுத்து அழைத்தும் அந்தப் பெண் படுக்கையை விட்டு எழுந்திருக்கவில்லை. அதற்காக உடனே அலுத்தும், சலித்தும் போய் விடவில்லை அந்த ஆண்டாள் பெருமாட்டி. தூங்கும் பெண்ணின் தாயாரை அழைத்தாள். 'தாங்களாவது மகளைத் தட்டிக் கேட்கக் கூடாதா? தட்டி எழுப்பக் கூடாதா? 'அதிக நேரம் தூங்குவது ஆரோக்கியத் திற்குக் கேடு' என்று அதட்டிக் கூறக் கூடாதா?' என்று மேலும் பாசுரத்தில் பகர்கின்றாள்.

**'மாமீர்! அவளை எழுப்பீரோ? உம்<br>மகள் தான்<br>ஊமையோ? அன்றிச் செவிடோ?<br>அனந்தலோ!<br>ஏமப் பெருந்துயில் மந்திரப்<br>பட்டாளோ?'**

பல பேர் கும்பகர்ணனை மிஞ்சும் குறட்டை ஒலியோடு காலை ஒன்பது, பத்து மணி வரை படுக்கையில் உருண்டு கொண்டே இருக்கிறார்கள். தூங்குவது ஆறு, ஏழு மணியோடு அடங்கி விட்டாலும், தூக்கக் கலக்கத்தில் ஒரு மணி நேரம், சோம்பலில் ஒரு மணி நேரம் என பொழுது போய்க் கொண்டே இருக்கிறது.

ஆசியஜோதியாகத் திகழ்ந்த ஜவஹர் லால் நேரு தேனியின் சுறுசுறுப்பு வாய்ந்தவர். அவர் என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா - "ஒருவனுக்குச் சோம்பலைப் போல் பெரிய எதிரி வேறெதுவும் இல்லை." சோம்பலுக்கு இன்று ஒரு நாள் நீங்கள் இடம் கொடுத்தால் அடுத்த நாளை அது தானே எடுத்துக் கொள்ளும்! சோம்பல் குணத்திற்கு அப்படி ஒரு சுறுசுறுப்பு இருக்கிறது!

**'நல்ல பொழுதை எல்லாம் தூங்கிக்<br>கழித்தவர்கள்<br>நாட்டைக் கெடுத்ததுடன் தானும்<br>கெட்டார்! - சிலர்<br>அல்லும் பகலும் தெருக்கல்லாய்<br>இருந்து விட்டு<br>அதிர்ஷ்டம் இல்லை என்று அலட்டிக்<br>கொண்டார்!<br>விழித்துக் கொண்டோர் எல்லாம்<br>பிழைத்துக் கொண்டார்! வெறும்<br>குறட்டைவிட்டோர் எல்லாம்<br>கோட்டை விட்டார்!**

தூக்கத்தின் தீமையைத் திரைப்பாடல் எவ்வளவு தீர்க்கமாகாகக் காட்டுகிறது பார்த்தீர்களா? இந்தத் திரைப் பாடலைக் கேட்டபடியே திரும்பிப் படுத்துக் கொள்பவர்களும் இருக்கத் தான் செய்கிறார்கள்! என்ன செய்ய? உறக்கத்தில் சுகம் கண்ட ஒருத்தியிடம் தோழிகள் கேட்டார்கள் : 'நேற்று இரவு ஏதேதோ உறுதிமொழி வழங்கினாயே! நாளை காலை அதிகாலையிலேயே எழுந்து உங்கள் அனைவர் வீடுகளும் வந்து உங்களை எல்லாம் எழுப்புவேன் என்றாய். இப்போதோ பாசத்தைப் படுக்கையின் மீதல்லவா வைத்து விட்டாய்! நேற்றோடு நீ சொன்ன வார்த்தை காற்றோடு போயாச்சா?'

**'மானே! நீ நென்னலை நாளை<br>வந்து உங்களை<br>நானே எழுப்புவன்' என்றாலும்<br>நாணாமே<br>போனதிசை பகராய்! இன்னம்<br>புலர்ந்தின்றோ?<br>இப்போதார் அமளிக்கே நேசமும்<br>வைத்தனையோ?**

-இப்படி ஒரு சம்பவத்தை தான் பாடிய திருவெம்பாவையில் தெரிவிக்கிறார் மாணிக்கவாசகர். கீழ்வரும் அறிஞர் ஒருவரின் வாசகத்தை இன்றைய இளம் பருவத்தினர் அனைவரும் அனுதினமும் எண்ணிச் செயற்பட வேண்டுவது அவசியம். 'முதுமையில் நீ ரோஜா மலர் மெத்தையில் படுக்க விரும்பினால், இளமையில் முட்களின் மீது நடந்து போ!' போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு தூங்குவதில் ஒரு அலாதி சுகம் இருப்பது போல் தான் தோன்றும். ஆனால், அளவோடு தூங்கி, அதிகாலையில் எழுந்து அன்றாடக் கடமைகளில் ஈடுபட்டுப் பாருங்கள், அதில் வரும் விநோத இன்பத்தை விபரிக்க முடியாது.

குறுகிய நேரத்திலேயே குறிப்பிட்ட கடமைகள் முடிந்து விடும். அதிகப் புத்துணர்ச்சியுடன் அலுவலகத்திற்குப் புறப்படுவீர்கள்.

# செய்தித்துளிகள்

## மட்டக்களப்பில் இதுவரை 5546 பி.சி.ஆர். பரிசோதனை

(ஏறாவூர்)

மட்டக்களப்பில் இதுவரை 5546 பி.சி.ஆர் பரிசோதனைகள் இடம்பெற்றுள்ளதாக அவ்வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட 5546 பி.சி.ஆர் பரிசோதனைகளில் 317 பேருக்கு கொரோனா வைரஸ் நோய்த் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஜ-4)

## கொச்சிக்கடை பகுதியில் வெடி பொருட்களுடன் ஒருவர் கைது

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பு - கொச்சிக்கடை-தலுவகொடுவ பிரதேசத்தில் துப்பாக்கி மற்றும் வெடி பொருட்கள் வைத்திருந்த நபரொருவரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நேற்று முன்தினம் கைது செய்தனர். நீல் அருண பிரனாந்து என்றழைக்கப்படும் தலுகொடுவ நீல் என்பவரையே இவ்வாறு கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட போது சந்தேக நபரிடம் ஒரு விமான துப்பாக்கி 26 ரவைகள் மற்றும் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்றையும் குறித்த அதிரடிப்படையினர் கைப்பற்றினர்.(ஜ-4)

## 32 வெளிநாட்டு மாலுமிகள் நாட்டை வந்தடைந்தனர்

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ள கப்பலில் பணியாற்றுவதற்காக 32 வெளிநாட்டு மாலுமிகள் நேற்று நாட்டை வந்தடைந்துள்ளனர். டோகாவிலிருந்து கட்டார் எயர்வேஸ் விமான நிறுவனத்துக்கு சொந்தமான கியூ.ஆர் -668 என்ற விமானத்தின் மூலமாகவே இவர்கள் நேற்று அதிகாலை 1.45 மணிக்கு பண்டாரநாயக்க, கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர். விமான நிலையத்திற்கு வந்த பின்னர் அவர்களை பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|
| கத்தரிக்காய் | 80 | 120 |
| உருளைக்கிழங்கு | 160 | 160 |
| பச்சைமிளகாய் | 250 | 250 |
| தக்காளி | 110 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 80 |
| கோவா | 110 | 120 |
| கரட் | 160 | 160 |
| பூசணி | 40 | 60 |
| புடோல் | 60 | 80 |
| வாழைக்காய் | 250 | 120 |
| சின்ன வெங்காயம் | 150 | 200 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 |
| பாகற்காய் | 250 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 |
| பயற்றங்காய் | 200 | 120 |
| லீக்ஸ் | 100 | 100 |
| பீற்றூட் | 80 | 120 |
| கறிமிளகாய் | 240 | 240 |
| முருங்கைக்காய் | 100 | 80 |
| போஞ்சி | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 100 |
| கீரை - 1 பிடி | 40 | 40 |
| தேசிக்காய் | 250 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 65 | 60-80 |
| இராசவள்ளி | 300 | -- |
| வெங்காயப்பூ | 250 | 200 |
| முள்ளங்கி | 60 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 30 |
| வல்லாரை | 20 | 20 |
| ஈரப்பலா | 40 | 50 |




# முட்டாள் முதலையும் புத்திசாலிக் குரங்கும்

ஒரு நதியில் முதலை தன் துணைவியாருடன் வாழ்ந்து வந்தது. நதிக்கரையோரம் ஒரு குரங்கு வாழ்ந்து வந்தது. முதலையும் குரங்கும் நண்பர்களாக வாழ்ந்து வந்தனர்.

ஒரு நாள் பெண் முதலை ஆண்முதலையிடம்தன்ஆசையைத் தெரிவித்தது. எனக்கு ரொம்ப நாளாக குரங்கின் இதயத்தை சாப்பிடனும்னு ஆசை. தங்களால் கொண்டு வரமுடியுமா? எனக் கேட்டது.

ஆண்முதலை யோசித்தது என்ன செய்வதென்று. திடீரென ஒரு யோசனை வந்தது. சரி,நான் கொண்டுவருகிறேன் எனச் சம்மதித்தது.

நம் குரங்கு நண்பனை வீட்டிற்கு விருந்துக்கு அழைப்போம். அவனும் வருவான். அவனைக் கொன்று இதயத்தைச் சாப்பிடு எனக் கூறியது.

அதனைக் கேட்ட பெண் முதலைக்கோ அளவு கடந்த சந்தோசம்.

அடுத்த நாள் ஆண் முதலை குரங்கு நண்பனை விருந்துக்கு அழைத்தது. குரங்கும் சம்மதித்து முதலையின் முதுகில் ஏறி அமர்ந்ததும் முதலை புறப்பட்டது.



நடு ஆற்றில் சென்று கொண்டிருக்கும் போது ஆண் முதலை கூறியது. இப்போ நாம் எங்கே செல்கிறோம் தெரியுமா? எனக் கேட்டது. அப்பாவிக்குரங்கு விருந்துக்கு தானேன்னு சொன்னது.

முதலை சொன்னது, அதான் இல்லை. என்னோட மனைவி குரங்கின் இதயம்சாப்பிட ஆசைப்பட்டா, அதுக்காகத் தான் உன்னைக் கூட்டிக்கிட்டு போறேன் எனக் கூறியது. குரங்கிற்கு அதிர்ச்சியாக இருந்தது.

சற்று யோசித்த குரங்கு, அடடா, என்ன நண்பா இதை முன்னாடியே சொல்லக்கூடாதா? நேற்று தான் என் இதயத்தை எடுத்துக் காயப்போட்டேன்.

அது அங்கேயே இருக்கின்றது எனக் கூற முதலையும் அப்படியா வா திரும்பிப்போய் எடுத்துக்கொண்டு வருவோம்னு திரும்பவும் கரைக்கு வந்து விட்டது.

தப்பித்த குரங்கு முதலையிடம் கூறியது. முட்டாள் முதலையே நீயெல்லாம்ஒரு நண்பன். என்னையே கொல்லப் பார்க்கிறாயான்னு சொல்லிட்டு மரத்தின் மேல் ஏறிப் போய்விட்டது.

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## ஆயிரத்தில் ஒருவன்



அருண்மொழிவர்மன்

தஞ்சாவூரிலிருந்த சோழர் அண்மனை, ராஜராஜனின் வாழ்விடமாகவும் தலைமைச் செயல் அலுவலகமாகவும் மாறியது. இரு முடிச் சோழன் அல்லது தஞ்சாவூர்க் கோயில் என்ற பெயர் கொண்ட அந்த அரண்மனையில் திருமஞ்சனசாலை என்கிற அரங்கம் உண்டு.

அங்குதான் ராஜராஜனுக்கு மகாபிஷேகம் நடைபெற்றது. ராசியான இடமென்பதால் திருமஞ்சன சாலையில் தான் பல அறக்கட்டளைகள், நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

கி.பி. 985, ஜூன் 25 ஆம் திகதிக்குப் பிறகு சில நாட்களில் சுந்தர சோழனுக்குக்கும் வானவன் மாதேவிக்கும் பிறந்த அருண்மொழிவர்மன் என்கிற ராஜராஜன் அரியணை ஏறினார்.

முடிசூட்டு விழாவில் தான் அவருக்கு ராஜராஜன் என்கிற அபிஷேகப் பெயர் சூட்டப்பட்டது. (ராஜராஜன் எந்த வருடத்தில் பிறந்தார் என்கிற தகவல் இல்லை. ஆனால் ஐப்பசித் திங்களின் சதய நாளில் பிறந்தார் என்பது மட்டும் உறுதி. இதனால் தான் ராஜராஜன் காலத்தில் உருவான கோயில்களில் சதயநாளில் திருவிழா எடுக்கப்பட்டது)

ஆதித்தகரிகாலன் கொலையுண்ட பிறகு உத்தமசோழனின் ஆட்சி நடந்தது. அப்போது ஆதித்த கரிகாலனைக் கொலை செய்தவர்கள் பிடிபடவில்லை. ஆனால் 16 வருடங்கள் கழித்து, ராஜராஜன் ஆட்சிக்கு வந்த பிறகு அவர்கள் தண்டிக்கப்பட்டார்கள்.

ஆதித்தகரிகாலனைக் கொலை செய்த துரோகிகளான ரவிதாஸன், சோமன் சாம்பவன் மற்றும் கொலையுடன் தொடர்புடையவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

காட்டு மன்னார் கோயில் என்று இன்று வழங்கப் படும் உடையார்குடி என்ற இடத்திலுள்ள கோயிலின் பின்சுவரில் இந்த விடயம் பொறிக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கொலையில் உத்தமசோழனுக்கும் பங்கிருப்பதைக் கல்வெட்டு சூசகமாக அறிவிக்கிறது. கல்வெட்டில் துரோகிகள் தண்டிக்கப்பட்டுள்ளனர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆதித்தகரிகாலனைக் கொலை செய்தவர்கள் பாண்டியர்களோ, இல்லை சேரர்களோ என்றால் எதிரிகள் என்றுதான் கல்வெட்டில் பொறிக்கப்பட்டிருக்கும்.

ஆனால் கொலை செய்தவர்கள் கூடவே இருந்து குழிபறித்தவர்கள் என்பதால் துரோகிகள் என்று சொல்லப்படுகிறது.

ராஜராஜன் ஆட்சிக்கு வந்தவுடனே ஆதித்த கரிகாலனைக் கொலை செய்தவர்களுக்குத் தண்டனை கொடுத்தது மக்களுக்குப் பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்திருக்க வேண்டும்.

கல்வெட்டுக்கள் மூலமாக ராஜராஜனின் குடும்பம் பற்றி ஏராளமான தகவல்கள் கிடைக்கின்றன. ராஜராஜனுக்குக் குறைந்தது 15 மனைவிகளாவது இருந்திருக்க வேண்டும்.

உலகமகாதேவியார், திட்டைபிரான் மகள் சோழமாதேவியார், அபிமானவல்லியார், திரைலோக்கிய மாதேவியார், பஞ்சவன் மாதேவியார், பிருதிவி மாதேவியார், இலாட மாதேவியார், மீனவன் மாதேவியார், நக்கன் தில்லை அழகியார், காடன் தொங்கியார், கூந்தன் வீராணியார், இளங்கோன் பிச்சியார் ஆகிய பெயர்கள் கல்வெட்டுகளில் உள்ளன.

ராஜராஜன் இவர்களை நம் பெண்டுகள் என்று கல்வெட்டுகளில் குறிப்பிட்டுள்ளார்.

ராஜராஜனுக்கு மூன்று மகள்கள். குந்தவை (இவர்தான் சாளுக்கிய மன்னரைத் திருமணம் செய்து கொண்டார்). இன்னொரு பெண், சந்திரமல்லி என்கிற மாதேவடிகள். அக்காவின் மீது கொண்ட பாசத்துக்காக ஒரு பெண்ணுக்குக் குந்தவை எனும் தன்னை வளர்த்த பாட்டி செம்பியன் மாதேவிக்காக மாதேவடிகள் என்றும் தன் பெண்களுக்குப் பெயர் சூட்டினார் ராஜராஜ சோழன்.

(தொடரும்)

கொள்கையில் நம்பிக்கை இருக்க வேண்டியது தான். அது குருட்டுத்தனமாக இருக்கக்கூடாது.
- ஆவ்வரி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் மக்களே! விழிப்பாக இருங்கள்

நடைபெறப் போகும் பொதுத் தேர்தலின் போது, மக்களை ஏமாற்றுகின்ற உபாயங்கள் மிக உச்சமாக இடம்பெறலாம்.

இதற்காக பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளதான தகவல்கள் வெளியாகியுள்ளன.

பொதுவில் வாக்களிப்புக்கு முதல் நாள் அல்லது வாக்களிப்புத் தினத்தின் போது தமிழ் மக்கள் நம்பும் வகையில் வேண்டுமென்றே சில விடயங்களை வெளிப்படுத்தி, அதன்மூலம் வாக்குகளைத் தம் பக்கம் திசை திருப்புகின்ற வியூகங்கள் நடந்தாகும்.

இது தொடர்பில் தமிழ் மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

இங்கு கடந்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நாம் கவனம் செலுத்துவது முக்கியமானது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சஜித் பிரேமதாஸ தமிழ் மக்களின் பக்கம் நிற்கிறார் என்றும் அவர் தமிழ் மக்களுக்கு நாட்டைப் பிரித்துக் கொடுக்கப் போகிறார் என்றும் பிரசாரம் செய்யப்பட்டது.

இதனை அவர்கள் வலிமைப்படுத்தும் வகையில் தமிழ் மக்கள் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதான தகவல்களை சிங்கள மக்களிடம் பரப்பினர்.

அதன்விளைவு எதிர்பார்த்த வாக்குகளைக் கூட சிங்கள மக்களிடமிருந்து சஜித் பிரேமதாஸவால் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

ஆக, எவ்வளவுதான் தேர்தல் பிரசாரம் செய்தாலும் எவ்வளவுதான் மக்கள் ஆதரவு இருப்பதாக நம்பினாலும் ஒருகணப்பொழுதில் அத்தனையும் தலைகீழாக மாறக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு.

எனவே மேற்கூறப்பட்டது போன்ற சம்பவங்கள் மற்றும் தேர்தல் பிரசாரங்கள் நம் தமிழ் அரசியல் தரப்புகளிடையேயும் இடம்பெறலாம்.

இதற்காகப் பொய்ப் பிரசாரங்கள் கட்டவிழ்த்து விடப்படலாம்.

இது கண்டு தமிழ் மக்களாகிய நாம் மயக்கமடைவோமாயின் எங்களின் எதிர்காலம் இருளாவது தவிர்க்க முடியாது.

உண்மையில் தமிழ் மக்கள் அனைத்தும் அறிந்தவர்கள். அனுபவித்தவர்கள்.

இலங்கைப் பாராளுமன்றில் எங்கள் தமிழ்ப் பிரதிநிதிகள் என்ன செய்தார்கள், எப்படி நடந்து கொண்டார்கள், எந்தப் பக்கம் சாய்ந்து நின்றார்கள், அவர்கள் என்ன பெற்றுத் தந்தார்கள் என அனைத்தையும் நாம் நன்கு அறிவோம்.

எனவே எங்களை எவரும் ஏமாற்ற முடியாது. உசுப்பேத்த முடியாது என்பதை எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் நிரூபித்துக் காட்ட வேண்டும்.

இதற்காக மெய்ப்பொருளைக் காணுகின்ற விழிப்போடு இருப்போமாக.

# மக்களை பலி கொடுத்தேனும் வாழ நினைக்கும் அரசால் பொருளாதாரப்போரை வெற்றிகொள்ள முடியாது

## ரணில் விக்கிரமசிங்க சாடல்

(கொழும்பு)

**முழு உலகமும் எதிர்கொண்டிருக்கும் பொருளாதாரப்போரில் வெற்றியடையக்கூடிய ஆற்றல் அரசாங்கத்திற்கு இல்லை என்றும் சர்வதேச நாடுகள் தமது மக்களின் நலன்களை முன்னிறுத்தி செயற்பட்டுக்கொண்டிருக்கும் தருணத்தில், எமது அரசாங்கம் மக்களின் உயிர் பிரிந்தாலும் தாம் வாழவேண்டும் என்ற நிலைப்பாட்டிலிருந்து செயற்பட்டுக் கொண்டிருக்கிறது என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க கடுமையாகச் சாடியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய அரசாங்கத்தினால் பொருளாதாரப்போரில் ஒருபோதும் வெற்றியடைய முடியாது. சுற்றுலாத்துறையையும், ஏற்றுமதியையும் அரசாங்கம் முழுமையாக மறந்துபோயிருக்கிறது.

அரச சேவையாளர்களுக்கான ஊதியத்தில் குறைப்பு செய்யப்பட்டிருக்கிறது. கொரோனா வைரஸ் பரவலினால் முழு உலகமுமே ஒரு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கிறது.

ஏனைய சர்வதேச நாடுகள் அந்த நெருக்கடியிலிருந்து தமது பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கும், அதுவரையில் மக்களுக்கு அவசியமான நிவாரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஆனால் எமது நாட்டின் அரசாங்கம் என்ன செய்திருக்கிறது? அவுஸ்திரேலிய அரசாங்கம் அனைத்துக் குடும்பங்களுக்கும் நிவாரணமாக 3000 டொலர்களை வழங்கியது.

மக்கள் குறித்து சிந்திக்கின்ற, அவர்களுடைய நலன்களை முன்னிறுத்துகின்ற அரசாங்கம் இவ்வாறுதான் செயற்படும். ஆனால் எமது நாட்டில் நீர் மற்றும் மின்சாரக்கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டன. மக்களின் உயிர் பிரிந்தாலும் தாம் வாழவேண்டும் என்றே அரசாங்கம் நினைக்கின்றது என அவர் தெரிவித்தார். (ஜ-4)

## காதலியுடன் செல்பி எடுத்தவர் நீர்வீழ்ச்சியில் விழுந்து பலி

(கொழும்பு)

நெலுவ, தாவிலி எல்லயில் தனது காதலியுடன் நீராடச்சென்ற இளைஞன் நீர்வீழ்ச்சியில் இருந்து விழுந்து உயிரிழந்ததாகத் தெரிவித்தார்.

குறித்த நபர் அங்குள்ள கல் ஒன்றின் மீது ஏறி "செல்பி" எடுக்க முற்பட்டபோது கால்தவறி விழுந்துள்ளார். வெள்ளவத்தை பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய ரத்னராஜா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ஜ-4)

## தனுஷ்கோடிக்குள் ஊடுருவியவர் கைது

(தனுஷ்கோடி)

தலைமன்னாரில் இருந்து படகு மூலம் தனுஷ்கோடி அரிச்சல் முனைக்கு சென்றதாக கூறப்படும் முஹம்மட் உசேன் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடி அரிச்சல் முனை கடல் பகுதியில் முஹம்மட் உசேன் (வயது -68) என்பவரை நேற்று செவ்வாய்க்கிழமை காலை தலைமன்னாரில் இருந்து சென்ற படகு இறக்கிவிட்டு தப்பிச் சென்ற நிலையில் பொலிஸார் கைதுசெய்தனர். (ஜ-4-285)

## திறந்த பல்கலைக்கழகத்தின் 40வதுஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று 22 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தின் பிரதான மண்டபத்தில் இடம்பெறும்.

யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் மாணவர் விழிப்புணர்வுக் கருத்தரங்கு மற்றும் மரநடுகை நிகழ்வுகள் என்பன நடைபெறவுள்ளது என யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 23 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**வவுனியா பிரதேசத்தில்** பத்தினியார் மகிழங்குளம் கிராமம், வாரிக்குட்டியூர் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## மன்னாரில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பணமும் புடைவையும் வழங்கியதாக முறைப்பாடு

(மன்னார்)

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பணமும் புடைவையும் வழங்கிய அரசியல் கட்சி தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக மன்னார் உதவித் தேர்தல் ஆணையாளர் ஜெ.ஜெனிற்றன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் அரசியல் கட்சி ஒன்று கடந்த 18ஆம் திகதி முன்பள்ளி ஆசிரியர்களை அழைத்து தங்களது பிரசார நடவடிக்கையினை மேற்கொண்டது மட்டுமல்லாது அவர்களுக்கு இரண்டாயிரம் ரூபா பணமும் ஒரு புடைவையும் வழங்கியதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

குறித்த விடயம் தொடர்பாக மன்னார் மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது,

இச்சம்பவம் தொடர்பான முறைப்பாடு தேர்தல் முறைப்பாட்டுக் குழுவிற்கு கிடைத்தது. முறைப்பாட்டுக் குழு அதிகாரிகள் மற்றும் பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என மேலும் தெரிவித்தார். (4-5-285)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**கண்ணில்லாத கழுகு வெறும் சிறகு கொண்டு பறக்க முடியாது. ஞானக்கண்ணில்லாத வாழ்வு அத்தகையது. - பகவத் கீதை**

## ஆன்மீகச் சிந்தனைகள்

### சாந்தமாக இருக்க வழி

❖ பூகம்பத்தால் உலகமே அழிந்தாலும் கூட, சத்தியத்திற்கு எந்த காலத்திலும் அழிவு உண்டாகாது.

❖ கோபம் வரும்போது கண்ணாடியில் முகத்தைப் பாருங்கள். கோபம் தணிந்து சாந்தம் உண்டாகி விடும்.

❖ ஒருவரும் அறியாமல் மனிதன் பாவம் செய்கிறான். ஆனால், கடவுளின் பார்வையில் இருந்து யாரும் தப்ப முடியாது.

❖ யாசித்து உண்ணும் நெய்ச் சோற்றினை விட, உழைத்து உண்ணும் தண்ணீரும் சோறும் சிறப்பானது.

❖ லட்சியம் இல்லாத மனிதன் மிருகத்திற்குச் சமம்

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம்

# எச்சரிக்கைக் கடிதம் தொடர்பில் முக்கியத்துவம் வழங்கப்பட்டிருக்க வேண்டும்

## முன்னாள் பொலிஸ்மா அதிபர் சாட்சியம்

(கொழும்பு)

**பயங்கரவாத தாக்குதல் தொடர்பான எச்சரிக்கைக் கடிதம் 2019 ஏப்ரல் 9 ஆம் திகதி கிடைத்த நிலையில் அந்த கடிதத்துக்கு புலனாய்வு மற்றும் பாதுகாப்பு சபை மீளாய்வுக் கூட்டங்களில் அந்த நேரத்தில் முக்கியத்துவம் வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்று முன்னாள் பொலிஸ் மா அதிபர் என்.கே.இளங்கக்கோன் சுட்டிக்காட்டியுள்ளார்.**



உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் தொடர்ந்தும் சாட்சியமளித்த போதே அவர் இதனை சுட்டிக்காட்டியுள்ளார்.

தாம் குறித்த காலப்பகுதியில் பதவியில் இருந்திருந்தால், இந்த எச்சரிக்கைக் கடிதத்தின் முக்கியத்துவம் கருதி சந்தேகத்துக்குரியவர்களின் தகவல்களை அறிந்திருக்க முற்பட்டிருப்பதாக அவர் தமது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

இந்த எச்சரிக்கைக் கடிதம் கிடைக்கும் முன்னரும் மாவனல்ல மற்றும் வண்ணாத்திவில்லு ஆகிய இடங்களில் இடம்பெற்ற இரண்டு சந்தேகத்துக்குரிய சம்பவங்கள் தொடர்பில் குற்றப்புலனாய்வுத்துறை விசாரணைகளை ஆரம்பித்திருந்தது.

எனவே அந்த நேரத்தில் தாம் பதவியில் இருந்திருந்தால் பயங்கரவாத தடுப்புப்பிரிவு மற்றும் அரச புலனாய்வுப் பிரிவு மற்றும் ஏனைய புலனாய்வு நிறுவனங்களை அழைத்து கலந்துரையாடியிருப்பேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இந்தக்கடிதத்தின் முக்கியத்துவம் கருதி பாதுகாப்பு செயலாளர், பாதுகாப்பு அமைச்சருடனும் அரச புலனாய்வுத் துறையின் தலைவருடன் இணைந்து கலந்துரையாடல்களை நடத்தியிருக்க வேண்டும்.

அத்துடன் சஹ்ரான் ஹாசிமையும் அவரின் உதவியாளர்களையும் கைது செய்ய சாட்சியங்கள் குறைவாக இருந்திருந்தால் மாகாண உதவிக் காவல் அதிபர்களை கொண்டு அவர்களை கைது செய்ய விசேட நடவடிக்கையை எடுத்திருக்க முடியும் என்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் என்.கே. இளங்கக்கோன் உயிர்த்த ஞாயிறுத்தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் முன் சாட்சியமளித்துள்ளார். (ஐ-4)

# மைத்திரியின் சதியில் சிக்கியுள்ள ஐ.தே.க.

## ருவான் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

ராஜபக்ஷவினருடன் டீல் போட்டுக்கொண்டு செயற்பட்ட மைத்திரிபால சிறிசேனவின் சதித்திட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சிக்கிக்கொண்டது.

தொழில்நுட்பத்துடன் முன்னுக்கு செல்வதன் மூலமே எதிர்காலத்தை வெற்றி கொள்ள முடியும். என்றாலும் மைத்திரிபால சிறிசேன நவீன தொழில்நுட்ப திட்டங்களை விரும்பாத தலைவராக இருந்தார் என ஐக்கிய தேசியக் கட்சி பிரதி செயலாளரும் கம்பஹா மாவட்ட வேட்பாளருமான ருவான் விஜேவர்த்தன தெரிவித்தார்.

களனி தொகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

நவீன தொழில்நுட்பத்துடன் முன்னுக்கு செல்வதன் மூலமே நாட்டின் எதிர்காலத்தை வெற்றிகொள்ள முடியும் என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடாகும். கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் நாங்கள் முன்னெடுத்த தொழில்நுட்ப வேலைத் திட்டங்களை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதனை முன்னெடுக்க விடாமல் தடுத்து வந்தார். அவர் ராஜபக்ஷவினருடன் டீல் போட்டுக்கொண்டு செயற்பட்டிருக்கின்றார். அவரின் சதித்திட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சிக்கிக் கொண்டது.

கல்வி அமைச்சினூடாக மாணவர்களுக்கு வழங்குவதற்கு இருந்த மடிக்கணனி, நாடு பூராகவும் இலவசமாக மற்றும் குறைந்த கட்டணத்தில்



இணையத்தள வசதிகளை வழங்க இருந்தோம். இவை அனைத்தையும் மைத்திரிபால சிறிசேன தடைகளை ஏற்படுத்தி, அவற்றை தொடரவிடாது செயற்பட்டார். நவீன தொழில்நுட்ட திட்டங்களை விரும்பாத தலைவராகவே மைத்திரிபால சிறிசேன இருந்து வந்தார்.

அத்துடன் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக என்னை நியமித்த மைத்திரிபால சிறிசேன, அதில் எனக்கு எந்த அதிகாரத்தையும் வழங்கியிருக்கவில்லை. தேசிய பாதுகாப்பு மக்கள் அமைதி தொடர்பான எந்தப் பொறுப்பும் இல்லாத சில விடயங்களை மாத்திரம் வர்த்தமானிப்படுத்தி இருந்தார்.

ஆனால் அவர் அவருக்கு இருந்த பொறுப்புக்களை சரியாக நிறைவேற்றாமல் இறுதியில் நாட்டின் தலையெழுத்தையே கேள்விக்குறியாக்கும் நிலைக்கு மாற்றி விட்டுச் சென்றார். எப்போதுமே சுயநலமாக செயற்படும் மைத்திரிபால சிறிசேன போன்ற சுயநலவாதி ஒருவரை நாட்டின் தலைவராக கொண்டு வந்தமையையிட்டு கவலையடைகின்றோம் என அவர் தெரிவித்தார். (ஐ-4)

## கடவுச்சீட்டு மோசடி விவகாரம்; விமலின் மனைவிக்கு பிடியாணை



(கொழும்பு)

அமைச்சர் விமல் வீரவன்சவின் மனைவி சஷி வீரவன்சவை கைது செய்ய நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

தேசிய அடையாள அட்டை மற்றும் கடவுச் சீட்டு மோசடி உள்ளிட்ட குற்றச்சாட்டு தொடர்பாக சஷி வீரவன்ச மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை அடிப்படையாகக் கொண்டே பிடியாணை உத்தரவினை கொழும்பு, தலைமை நீதவான் லங்கா ஜயரட்ண பிறப்பித்தார்.

அத்துடன் இந்த வழக்கு தொடர்பான விசாரணை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 18 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தில் போலி ஆவணங்களைச்சமர்ப்பிப்பதன் மூலம் இராஜதந்திர கடவுச்சீட்டு உட்பட இரண்டு கடவுச்சீட்டுகளை மோசடியாகப் பெற்றதாக சஷி வீரவன்ச மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## சுகாதார பரிசோதகர்களின் கோரிக்கைகளையும் அரசாங்கம் மறு பரிசீலனை செய்ய வேண்டும்

### இராதாகிருஷ்ணன் வலியுறுத்து

(கொழும்பு)

பொதுச் சுகாதார பரிசோதகர்களின் கோரிக்கைகளையும் அரசாங்கம் மறு பரிசீலனை செய்ய வேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கொரோனாத் தொற்று கடமையிலிருந்து விலகியுள்ளமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

தலவாக்கலையில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், "இன்று உலகம் பூராவும்கொரோனாத்தொற்று பெரும் அளவில் பரவிவருகின்றது. நாட்டிலும் கடந்த சில வாரங்களாக ஒவ்வொரு நாளும்கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்கள் கண்டு பிடிக்கப்படுகிறார்கள்.

இவ்வாறான ஒரு சூழ் நிலையில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தங்களுடைய கடமையில் இருந்து விலகி இருப்பது இந்த தொற்று பரவாமல் இருப்பதை தடுப்பதற்கு உகந்த ஒரு விடயமாக நான் கருதவில்லை.



எனவே அரசாங்கம் அவர்களை அழைத்து கலந்துரையாடி அவர்கள் கேட்கும் அந்த அதிகாரங்களை வழங்கி அவர்களையும் இணைத்துக் கொண்டு இந்த கொரோனா தொடர்பான நடவடிக்கையில் ஈடுபட முடியுமாக இருந்தால் அதுவே வெற்றியான செயற்பாடாக இருக்கும் என அவர் சுட்டிக்காட்டினார். (ஐ-4)

## 16 பவுண்...

கொள்ளையிடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் மூளாய்ப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மூளாயில் அதிகாலை வேளை வீட்டில் உள்ள அனைவரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த வேளை அறுவர் அடங்கிய குழுவொன்று அங்கு சென்று கதவைத் தட்டித் திறக்குமாறு கூறியது.

கதவு திறந்ததும் வாளினைக் காட்டி மிரட்டி நகை பணம் அனைத்தும் எங்கே வைத்துள்ளீர்கள் எனக் கேட்டது.

வீட்டில் உள்ளவர்கள் உயிருக்குப் பயந்து நகை இருக்கும் அலுமாரியையும் அதன் திறப்பு இருக்கும் இடத்தினையும் காட்டியுள்ளனர்.

உடனே வீட்டு மின்விளக்குகளை அவர்களே ஒளிரச் செய்துவிட்டு அலுமாரியைத் திறந்து நகையையும் பணத்தையும் எடுத்து விட்டு மேலும் எதுவும் உள்ளதா என இரண்டு அறைகளையும் சுமார் அரை மணித்தியாலம் சல்லடை போட்டுத் தேடிய பின்னர் அவ்விடத்தினை விட்டு வெளியேறினர்.

இத் திருட்டுச் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,104)

## தபால் மூலம்...

பட்டுள்ளது.

அதன்படி, நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மற்றும் அடுத்த நாள் 25ஆம் திகதி சனிக்கிழமை வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

குறித்த தினங்களில் தனது அலுவலகம் அமைந்துள்ள மாவட்டத்தின் மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் தமது தபால் மூல வாக்களிப்பை செலுத்த முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அதன்படி, 24 ஆம் திகதி காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரையும் 25 ஆம் திகதி காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரையும் வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம-3)

## சுகாதார விதி...

ளது என்று யாழ்.மாநகர பதில் முதல்வர் து.ஈசன் தெரிவித்தார்.

அங்கப்பிரதிஷ்டை, காவடி, அன்னதானம், தண்ணீர்ப்பந்தல் மற்றும் வியாபார நடவடிக்கைகளுக்கு முழுமையான தடை விதிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபையில் நேற்று நடந்த விசேட அமர்வில் பொது சுகாதார பரிசோதகர்களாலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நல்லூர் திருவிழாவில் 500இற்கும் அதிகமான பக்தர்களை அனுமதிக்க நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியிருந்தார்.

இருப்பினும் சுகாதார துறையினரால் பிரதமரின் அறிவிப்பு தொடர்பில் பொது சுகாதார பரிசோதர்களுக்கு உத்தியோகபூர்வமாக எந்த அறிவுறுத்தலும் விடுக்கப்படவில்லை.

மேலும் அன்னதானம், வியாபார நிலையங்கள், தண்ணீர்ப் பந்தல்கள் போன்றவற்றினையும் இம்முறை தடை செய்யப்படவுள்ளதாகவும் பதில் முதல் மேலும் தெரிவித்தார். (ம-3)

## காணாமல் ஆக்...

ஆக்கப்பட்ட உறவினர்களின் போராட்டம் நேற்றுடன் 1250 ஆவது நாட்களை எட்டுவதையிட்டு கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள்,

கடந்த 1250 நாட்களாக நாம் போராடி வருகின்றோம். எமக்கான தீர்வினை தருமாறு வெளிநாடுகளிடம் நாம் கோரிக்கையை முன்வைத்துள்ளோம். எமது பிரச்சினையை பார்க்காமல் தேர்தல் தேர்தல் என்று அனைத்துக் கட்சிகளும் அலைகின்றன.

கூட்டமைப்பினர் இரவிரவாக வாக்கு கேட்டு வீடுகளுக்கு செல்கின்றனர். எமது பிரச்சினைக்கு தீர்வை கண்டிருந்தால் எமக்கு வாக்குபோடுங்கள் என்று அவர்கள் கேட்க வேண்டிய தேவையே இல்லை. எனவே இவ்வாறானவர்களை புறம் தள்ளிவிட்டு இராஜதந்திரம் மிக்க சட்டத்தரணிகளிற்கு இத்தேர்தலில் மக்கள் வாக்களிக்க வேண்டும்.

மீண்டும் அவர்களிற்கு வாக்களித்தால் இன்னும் ஐந்து வருடங்கள் வீதிகளிலே தான் நாம் இருக்கவேண்டும். அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவர்களின் தேர்தல் அறிக்கையை அண்மையில் வெளியிட்டது.

அதில் சில முக்கியமான விடயங்களை நாங்கள் கவனித்திருக்கிறோம். அவர்களின் அறிக்கையின் அடிப்படையில், அடுத்த தேர்தல் முடிவதற்குள் தமிழர்கள் அடிமைப்படுத்தப்படுவார்கள் என்பது நிச்சயம். சிங்களவர்களை பிரியப்படுத்தும் செய்தியாகவே அது தெரிகிறது.

அண்மையில் சிங்களச் செய்தி ஊடகத்தில் சுமந்திரன் வழங்கிய நேர்காணலில், தமிழர்களை பயங்கரவாதிகள் என்றும் கீழ்த்தரமானவர்கள் என்றும் சிங்களத்தை மகிழ்வித்தார்.

இது ராஜபக்ஷர்களையும், சிங்கள மக்களையும் மகிழ்ச்சி அளிப்பதற்கான சுமந்திரனின் செயல் என்பதுடன் சுமந்திரன் ஒரு மந்திரிப் பதவியைப் பெறுவதற்கு, கையாளும் தந்திரமாகவே இது காணப்படுகின்றது.

அத்துடன், தமிழர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றிய சில கதைகளை அந்த அறிக்கையில் கூறுகிறார்கள்.

ஆனால் தமிழரின் துன்பத்திற்காக அவர்கள் என்ன செய்தார்கள் என்பது பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்க நாட்டுக் கொடிகளை ஏந்தியிருந்ததுடன் கோசங்களையும் எழுப்பியிருந்தனர். (ம-3,299)

## மாகாண சபை...

கொள்ளக் கூடியது என்றும் குறிப்பிட்டார்.

தமிழ் மக்களுக்கு அரசியலமைப்பின் பிரகாரம் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்றும் அத்தீர்வு ஒருமித்த நாட்டுக்குள் முரண்படாத விதத்தில் அமைய வேண்டும் என்பதே தனது நிலைப்பாடு என்றும் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கொள்கைத் திட்டங்களை புதிய அரசாங்கத்தில் முழுமையாக செயற்படுத்த ஆளும் தரப்பில் கூட்டணியமைத்துள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்கள், உறுப்பினர்கள் இணக்கம் தெரிவித்துள்ளார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில் பொதுத் தேர்தலுக்கான பொதுஜன பெரமுன தனித்து கொள்கைத் திட்டத்தை தயாரித்தால் நிறைவேற்றுத்துறைக்கும், சட்டத்துறைக்கும் இடையில் வீண் முரண்பாடுகளை தோற்றுவிக்கும் என்றும் சுட்டிக் காட்டினார்.

மேலும் ஜனாதிபதியின் கொள்கைத் திட்டம் ஒரு இனத்தையும் ஒரு மதத்தையும் வரையறுத்ததாக அமையவில்லை எனச் சுட்டிக் காட்டிய வாசுதேவ நாணயக்கார, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை இல்லாதொழிப்பதாக ஆளும் தரப்பினர் தாங்கள் பிரபல்யமாகுவதற்காக கருத்துக்களை தெரிவிக்கின்றனர் என்றும் குறிப்பிட்டார். (ம-3)

# பெண்களை அதிகாரத்தில் இருத்த ஐ.தே.க தயார் – ரணில்



(கொழும்பு)

பெண்களின் பொருளாதார மற்றும் அவர்கள் சமூகத்தில் தலைநிமிர்ந்து வாழும் ஒரு சூழலை உருவாக்க ஐக்கிய தேசியக் கட்சி பல திட்டங்களை முன்வைத்துள்ளது என அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி அமைப்புகளுக்குள் பெண்களுக்கு 25% ஒதுக்கீடு கடந்த ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கத்தினால் உறுதி செய்யப்பட்டது என்றும் குறிப்பிட்டார்.

மாகாண சபைகளுக்குள் பெண்கள் 25% ஒதுக்கீட்டைப் பெறுவார்கள் என்பதை உறுதி செய்யும் வகையில் புதிய சட்டங்களை இயற்றுவதாகவும் அவர் உறுதியளித்தார்.

குறிப்பாக அரச நிறுவனங்கள், பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்களிலும் பெண்களுக்கு ஒரு ஒதுக்கீட்டை வழங்க திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன, அத்துடன் கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக ஏற்பட்ட நெருக்கடி பெண்களின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான எதிர்வரும் அரசாங்கத் தின் கீழ் பெண்களுக்கு சிறந்த வாய்ப்புகள் மற்றும் பாதுகாப்பான சூழல் உருவாக்கப்படும் என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (ம-3)

மஹஜன சம்பத
திகதி 2020/07/21
சீட்டிழுப்பு இலக்கம் 4190
H 1 6 5 3 3 3

தன நிதானய
திகதி - 2020.07.21
சீட்டிழுப்பு இலக்கம் - 293
A 15 29 41 61

கொவிசெத
சீட்டிழுப்பு திகதி 21-07-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2485
N 24 37 46 51

நீரோகா
திகதி 21/07/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0688
துலாம் 14 27 50 55

மெகா பவர்
திகதி 21/07/2020
சீட்டிழுப்பு இலக்கம் 557
V 18 17 33 60 74

K 08 32 33 61
601
21.07 2020
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 78,141,930
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 987
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.07.21
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 53,847,930/-
வெற்றி இலக்கங்கள் 06 27 36 60 U

ராசி
வெற்றி வாரம் 2868
வர்ணம் சிவப்பு
திகதி 21.07.2020
வெற்றி இலக்கங்கள் 03 15 45 51 தனுசு
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 2,165,932
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

ஜயோதா
சீட்டிழுப்பு வாரம் 1674
சீட்டிழுப்பு திகதி 21/07/2020
வெற்றி இலக்கங்கள் 33 54 60 68 E
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 50,972,364
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

# யாழ். மாநகரசபை எல்லைக்குள் ஸ்மார்ட் கோபுரங்களை அமைக்கத் தடையில்லை

## மனுவைத் தள்ளுபடி செய்தது நீதிமன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஸ்மார்ட் லாம்ப் போல் (Smart Lamp Pole) கோபுரங்கள் அமைப்பதற்கு தடை விதிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட நீதிப் பேராணை மனுவை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்தது.

எனவே மனுதாரரின், மனுவில் உள்ள குறைபாடு, எழுத்தாணை மனுவுக்குத் தேவையான கருவூலங்கள் தொடர்பில் திருப்திப்பாடு ஏற்படுத்தப்படாமை மற்றும் மனுதாரரிடம் உள்ள கீழ்த்தரமான நோக்கம் என்பவற்றால் இந்த எழுத்தாணை மனு தள்ளுபடி செய்யப்படுகிறது" என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கர் கட்டளை வழங்கினார்.

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஸ்மார்ட் லாம்ப் போல் (Smart Lamp Pole) கோபுரங்கள் அமைப்பதற்கு தடை விதிக்கக் கோரி 2019ஆம் ஆண்டு ஜூலை மாதம், யாழ்ப்பாணத்தில் வடக்கு மாகாண மேல் நீதிமன்றில் நீதிப் பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ம-3)

# தேர்தலின் பின் இலங்கையில் இராணுவ ஆட்சி ஏற்படும்

## விஜயபால ஹெட்டியாராச்சி

(கொழும்பு)

பொதுத் தேர்தலின் பின் அரசாங்கம் இராணுவ ஆட்சியை ஸ்தாபித்து, நாட்டு மக்களுக்கு சுதந்திரமாக சுவாசிக்கக் கூட சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுக்காத நிலை ஏற்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் விஜயபால ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் தேர்தலின் பின்னர் அரசாங்கம் இராணுவ ஆட்சியை ஸ்தாபித்து, நாட்டு மக்களுக்குச் சுதந்திரமாக சுவாசிக்கக் கூட சந்தர்ப்பம் பெற்றுக் கொடுக்காத நிலைமை ஏற்படும். நாட்டை மாத்திரமின்றி தங்களை பாதுகாப்பார்கள் என்று கருதியே 69 இலட்சம் பேர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவு பெற்றுக் கொடுத்திருந்தனர்.

தேர்தல் காலத்தில் ராஜபக்ஷாக்களின் பிரசார செயற்பாடுகளுக்குக் காசு இல்லாததன் காரணமாக யாரிடமாவது முற்பணம் பெற்றுக் கொண்டதன் காரணமாகவா அரச மண்டபம் உடைக்கப்பட்டுள்ளது என்ற சந்தேகம் எமக்கு எழுந்துள்ளது என்றார். (ம-3)


**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி தபால் கந்தோர் வீதியில், பெருங்குளம் கிராம்புவில் முருகன் கோவில் நாற்சந்திக்கு அண்மையாக 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
(இலங்கை நேரம் மாலை 5.30 மணிக்குப் பின்னர் தொடர்பு கொள்ளவும்)

தொடர்பு : +1 647-929-7651
Viber / Whatsapp

**இந்திய சாஸ்திரியார் வருகை**

ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
சிங்கப்பூர்,மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் பெற்ற
இரத்தினசாமி அவர்கள்
ஜாதகம், கைரேகை, எண்கணிதம்
திருமணத்தடை, கல்வித்தடை, வெளிநாடு செல்லத்தடை மற்றும் குழந்தைப் பாக்கியம், காதலில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை, தொழில் முன்னேற்றமின்மை, புதிய தொழில் தொடங்க மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் தொடர்பு கொள்ளவும். (3259)

முன்பதிவுக்கு: 071 574 8358, 071 392 9703, 076 682 7368
இல.101, Kandy Rd, jaffna (யாழ்.நீதிமன்றத்திற்கு அருகில்).

**அண்ணா விரைவுப் பொதிகள் சேவை**

5 kg / 11kg க்கு மேல் 1 கிலோவுக்கான கட்டணம்

பிரான்ஸ் -ரூ.1500/ரூ.1300
ஜேர்மனி -ரூ.1500/ரூ.1300
டென்மார்க -ரூ.1500/ரூ.1300
கொலண்ட் -ரூ.1500/ரூ.1300
பெல்ஜியம்-ரூ.1600/ரூ.1300
இத்தாலி -ரூ.1700/ரூ.1450
லண்டன் -ரூ.1500/ரூ.1150

இச் சேவையில் மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் அறவிடப்படமாட்டாது.
5 - 8 வேலை நாட்கள்
எம்முடன் இணைந்து பொதிகள்சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்

லண்டன்-1000/= ,பிரான்ஸ்-ஜேர்மனி-டென்மார்க்-1200/= கனடா- 1500/=
சுவிஸ்- 1400/= அவுஸ்ரேலியா- 1600/= / 1000/= (வரி உள்ளடக்கப்படவில்லை)

976,KKS வீதி யாழ்ப்பாணம் | நெல்லியடி சங்கானை | கிளிநொச்சி முல்லைத்தீவு | 075 5522999 076 1221566 | பளை மன்னார் கொழும்பு 12

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**ராஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: ராஜ் - 077 679 6623 (3377)

**விற்பனைக்கு**

Navi (HONDA) BIC XXXX தொடர் இலக்கமுடையதும் 4000 Km ஓடியதுமான, நல்ல நிலையிலுள்ள மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. (3376)

தொடர்பு : 077 545 6420

**இலங்கை விசா நீடிப்பு**

வெளிநாட்டிலிருந்து இலங்கை வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.

VISA EXTENSION (விசா நீடிப்பு)
FOR FOREIGN PASSPORT

எமது கிளைகள்
யாழ்ப்பாணம், நெல்லியடி, புதுக்குடியிருப்பு, மருதங்கேணி, சாவகச்சேரி, மானிப்பாய், கிளிநொச்சி, கொடிகாமம், சுன்னாகம், பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை (C-9624)

V2 TRAVELS 0768227499


**மீண்டும்**
**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை**

அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும் 100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது. (C-9912)

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**
இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536





இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.